Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-06 19-01-2005 புதன்கிழமை ஓசை -336


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11118)

# ராணுவச் சமநிலையை அரசு குழப்பின் பாரிய நெருக்கடிக்கு வாய்ப்புண்டு

## ஐரோ. பிரதிநிதிகளிடம் புலிகள் அறிவுறுத்து

**இலங்கை அரசாங்கம் இராணுவச் சமநிலையைக் குழப்பி சமபங்காளிகள் என்ற அந்தஸ்த்தைப் புறக்கணித்து செயற்படுமேயானால் மீண்டுமொரு பெரிய நெருக்கடி தோன்றக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இதனைத் தவிர்ப்பதற்கு ஏற்கனவே சர்வதேச சமூகம் எப்படி உதவியதோ அதேபோன்று முடிவுகளையும் உதவிகளையும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தியுள்ளோம்.**

இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்றுக்காலை நெதர்லாந்துத் தூதுவர் சுசானா பிறங்கற் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் வூட்டர் வில்ரன் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.இப்பேட்டியின் விபரம் வருமாறு:

**இன்றைய சந்திப்பில் என்ன விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது?**

முக்கியமாக நாங்கள் இப்பொழுது சர்வதேச சமூகத்தின்பிரதிநிதிகளைச் சந்தித்துக் கொண்டுவருகின்றோம். அதன் தொடர்ச்சியாக இன்று நெதர்லாந்து தூதுவர்களும், ஐரோப்பிய யூனியன் பிரதிநிதியும் வருகை தந்து இங்குள்ள நிலைமைகளை நேரடியாகப் பார்வையிடச் செல்கின்றார்கள் அதற்கு முன்பாக எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடுகளை அறிந்துகொள்வதற்காக

(12 ஆம் பக்கம் பார்க்க)



## யாழ். இல் இருவாரகாலம் மட்டுமே வைத்திய உதவி முன்னெடுக்க முடிவு

### -யாழ். வந்துள்ள அமெ. கடற்படை அதிகாரி

கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான வைத்திய உதவிகளை இரண்டுவார காலப்பகுதிக்கு மட்டுமே யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்கக் கடற்படையின் மருத்துவப்பிரிவைச்சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி றொன்டேவிஸ் கூறியுள்ளார். வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதியர் உள்ளிட்ட அமெரிக்க கடற்படையின் மருத்துவ பிரிவைச் சேர்ந்த 20 பேர் கொண்ட குழுவிற்கு தலைமைதாங்கி வந்துள்ள றொன்டேவிஸ்ஒரு வைத்திய நிபுணராவார்.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் தனது குழுவினருடன் நேற்று முன்தினம் முதல் மருத்துவப் பணிகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் அடைமழை சுனாமியால் பாதிப்புற்றோர் பெரும் அவதி

சுனாமி கடற கொந்தளிப் பினால் பாதிப்பிற்குள்ளான கிழக்கு மாகாண மக்கள் தற்போது அங்கு பெய்துவரும் அடைமழையினால் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் முதல் மட்டு - அம்பாறை மாவட்டங்களில் பெய்துவரும் பெருமழையினால் ஏற்கனவே சுனாமி கடற் கொந்தளிப்பினால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பொது இடங்களில் தங்கியுள்ள சுமார் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன.

இவர்களிடமுள்ள கூடாரங்களிலும் தற்காலிக குடிசைகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ள ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களே பெரும் பாதிப்புக்குள்ளாகின.

இக்கூடாரங்களும் குடிசைகளும் தாழ்ந்த பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ளமையால் அவற்றுள் மழைவெள்ளம் புகுந்தது, இதனால் உடுபுடவைகள் அனைத்தும் நனைந்த நிலையில் குழந்தை உறங்கமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இதேவேளை திருகோணமலையிலும் இத்தகைய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி நிவாரணப் பணிகளை சந்திரிகா முடக்கியுள்ளார்

### புலிகளின் கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை

ஒட்டுமொத்த இலங்கையில் சுனாமியின் தாக்கத்தினால் உச்ச பாதிப்புக்குள்ளான இடம் முல்லைத்தீவு, மிகத் துரிதமாக மீட்புப்பணி மேற்கொள்ளப்பட்டதும் முல்லைத்தீவு தான் என்பதை ஊடகங்கள் வெளியுலகிற்கு தெரியப்படுத்தியதன் விளைவாக சந்திரிகா இப்போது அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி இங்கு மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட வேலைகள் அனைத்தையும் முடக்கிவிட்டார் என விடுதலைப் புலிகளின் கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை தெரிவித்தார். எமது செய்தியாளரிடம் அவர்பேசுகையில்,

இங்கு மீள்குடியமர்வையும் மிக வேகமாக செய்து முடிக்கத் தீர்மானித்தோம். அதாவது பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை ஒரு வாரத்திற்குள் தற்காலிகக் கொட்டகைகளில் குடியமர்த்துவதற்கான இடங்களைத் தெரிவு செய்து அவற்றைச் சீர்படுத்தி குடிசைகளை அமைப்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையில்தான் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் பாடசாலைகளை மீள இயங்க வைக்க முடியவில்லை. மக்களையும் குடியமர்த்தவில்லை எனத் தெரிவித்தார். முல்லைதீவு மாவட்ட அரச அதிபரினூடாக பெருமளவான கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்காக 500 இலட்சம் ரூபாவை வழங்கிவிட்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஏப்ரல் 20 இல் ஆரம்பம்

### சுனாமியால் பாதிப்புற்றோருக்கு யூனில்

இவ்வாண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை வரும் ஏப்ரல் மாதம் இருபதாம் திகதி ஆரம்பமாகுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இந்தப் பரீட்சை மே மாதம் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. பாடசாலை ரீதியாக ஒரு இலட்சத்து தொண்நூறாயிரத்து முந்நூற்றி எண்பத்தி மூன்று பரீட்சார்த்திகளும் தனிப்பட்ட ரீதியில் நாற்பத்தெண்ணாயிரத்து ஐந்நூறு பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ கனரக வாகனம் மோதி 5 பிள்ளைகளின் தந்தை மரணம்

### -சம்பவத்தை மூடிமறைக்க இராணுவம் முயற்சி

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் மிருசுவில் பழைய வாய்க்கால் சந்தியில் இரவு பதினொரு மணியளவில் வேலை செய்து விட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்த வையிரவன் நடேசன் வயது 47 என்பவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்த வேளை எழுதுமட்டுவாள் பகுதியில் இருந்து பிரதான சாலை வழியாக சிறிலங்காப்படைகளை ஏற்றி வந்த கனரக வாகனம் மோதியதில் சம்பவ இடத்திலேயே தலை நசுங்கி இவர் மரணம் அடைந்துள்ளார். சிங்களப் படையினர் உடனடியாக சிறிலங்காப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

10.04.2000 அன்று முல்லை மாவட்டம் ஒட்டுசுட்டான் பகுதியில் எம்மவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஓயாத அலைகள் 03 நடவடிக்கையின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை பாவலன்- குகேஸ்வரன்-சுதாகரன் (சொ.இடம்:-வறுத்தலை விளான்-தெல்லிப்பழை-யாழ்ப்பாணம், தற்.இடம்:-புகையிரத நிலைய வீதி ,வைரவப் புளியங் குளம் வவுனியா) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வீரவணக்கம்

31.05.2004 அன்று ஏற்பட்ட வாகன விபத் தொன்றின் போது நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் லிங்கேஸ்வரன் இ.லிங்கன் சொ.பெயர்-வைரவநாதன்-லிங்கேஸ்வரன். (சொ.இடம்:-04 ஆம் வட்டாரம்-புங்குடுதீவு, யாழ்ப்பாணம். தற். இடம்:-சீராளன் குடியிருப்பு- இலுப்பைக்கடவை-மன்னார்.) என்பவரே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வரிவிளம்பரம்

### உடன் தேவை

கிளிநொச்சி, டிப்போச்சந்தி திருநகருக்கு இடைப்பட்ட பகுதியில் A/L வகுப்பு (பொளதிகவியல்) நடத்துவதற்கு வீடு அல்லது அதற்கு அமைவான இடம் உடன் தேவை தொடர்பு:- ச.சதீஸ்குமார், நிறைமதி நகைமாடம், கந்தசாமி கோவில் முன்பாக கிளிநொச்சி. (சி-5564)

### வைத்தியம்

வாதநோய், நரம்புத்தளர்ச்சி நோய்களுக்கு உட்பட்டவர்களுக்கு அவர்களின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று நவீன ஆயுர்வேத முறைப்படி சிகிச்சையளிக்கப்படும். டாக்டர் திருலோகமூர்த்தி, டீ.ஏ.எம். (இலங்கை) சர்வதேச மருத்து பட்டதாரி கௌரிகிளினிக் கண்ணன்கோவில் முன்பாக கிளிநொச்சி.நகர். (5571)

### வீடுவாடகைக்கு

இல.09கனகபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள, அரச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பொருத்தமான வீடொன்று வாடகைக்கு உண்டு.தொடர்புகளுக்கு மாயவன்அரிசி ஆலை, கனகபுரம் கிளிநொச்சி. அல்லது. T.P. 2225475 தொடர்பு கொள்ளவும். (5567)


## அடிக்கல் நாட்டல்

பூநகரி 4ஆம் கட்டையில் நிக்கொட்நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட விருக்கும் இருமாடிக்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்வு இன்று புதன் காலை 11.00 மணிக்கு பூநகரி சிறீவிக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு அரச அதிபர் தி.இராசநாயகம் பிரதமவிருந்தினராக கலந்து கொள்கிறார். (34)

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கு உதவுவதில் பாரபட்சத்தை நீக்க இரு தமிழ் பேசும் அரச அதிபர்களை நியமிக்க வற்புறுத்து!

### - கொள்கையளவில் அமைச்சர் இணக்கம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்திற்கு இரு தமிழ் பேசும் மேலதிக அரச அதிபர்கள் நியமிப்பதற்குக் கொள்கையளவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்காவின் பொது நிறுவாக முகாமைத்துவ மறுசீராக்கல் அமைச்சர் அமர ஸ்ரீ தொடங்கொடவிடம் அகில இலங்கைஅரச பொது ஊழியர் முன்னணித் தலைவர் எஸ். லோகநாதன் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் மேற்படி இணக்கம் காணப்பட்டுள்ளது. சுனாமி அனர்த்தத்தையடுத்துக் கரையோரப் பிரதேச பாதிப்புப் பிரதேசங்களுக்கான நிவாரணப் பணிகள் மேற்கொள்வதில் அம்பாறை கச்சேரி பலத்த அசௌகரியங்களையும் பாரபட்சங்களையும் காட்டிவருவதாக அவர் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார். முஸ்லிம் சமூகத்திற்கான நிவாரணப் பணிகளை முஸ்லிம் அமைச்சர்கள், எம்.பிக்கள் முன்னின்று செய்வதால் பிரச்சினை பெரிதாக இல்லை. ஆனால் இதனால் தமிழ்ப் பிரதேசங்களுக்கான நிவாரணப் பணிகளில் தொய்வு நிலை காணப்படுவதாக அவர் எடுத்துக் கூறினார். எனவே, அரச அதிபருக்கு மேலதிகமாக தமிழ், முஸ்லிம் சமூகத்திலிருந்து இரு மேலதிக அரச அதிபர்களை நியமிக்க கோரியபோது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆரம்ப சுகாதார நிலையங்களை விரைவில் கட்டித்தரக் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சுகாதாரத் திணைக்களத்திற்கு கட்டி முடித்து கொடுக்கப்பட வேண்டிய பல ஆரம்ப சுகாதார நிலையங்கள் இன்னும் கையளிக்கப்படாத நிலையில் உள்ளன. இந்நிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் உட்பட பலருக்கும் சுகாதார சேவையை வழங்குவதில் திணைக்களம் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றது. எனவே இதில் சம்பந்தப்பட்டவர்கள் இக்கட்டடங்களை விரைவில் கையளிப்பதற்குரிய நடவடிக்கையினை மேற்கொண்டு மக்களுக்கு உரிய சேவையினை வழங்க உதவுமாறு கிளிநொச்சி மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி கேட்டுள்ளார்.

### - சுனாமி பேரலைகளில் சிக்குண்டு -

# 1600 பேரைப் பலிகொண்ட தெல்வத்த ரயில் விபத்தை ஆராய சுயாதீன ஆணைக்குழு அமைக்கக் கோரல்

(கொழும்பு)

கடந்த மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரலைத் தாக்கத்தினால் விபத்துக்குள்ளாகி 1600பேரைப் பலிகொண்ட தென் பகுதியின் தெல்வத்த ரயில் விபத்து தொடர்பாக விசாரணை மேற்கொள்ள சுயாதீன ஆணைக் குழு ஒன்றை அமைக்குமாறு சிறிலங்காவின் போக்குவரத்து அமைச்சர் சனாதிபதியைக் கேட்டுள்ளார்.

உலகில் இதுவரை நடைபெறாத விபத்தாகக் கருதப்படும் இச் சம்பவத்துக்கு திணைக்களத்தில் பொறுப்பாக இருந்தவர்களின் கவனக்குறைவே காரணமென என தற்போது சந்தேகம் கிளம்பியுள்ளதால் அமைச்சர் மேற்படி ஆணைக்குழுவின் அவசியம் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்.

அம்பலாங்கொடைக்கும் ஹிக்கடுவைக்கும் இடையில் நடைபெற்ற இந்த விபத்தைத் தடுப்பதற்கு தொலைபேசி அழைப்பு விடுக்கப்பட்டபோதும்அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

தொலைபேசி ஊடாக எச்சரிக்கை விடுக்கப்பட்டவேளை ரயில் நிலைய அதிகாரி ஒருவர் எருமைத் தயிர்வியாபாரத்தில் ஈடுபட்டிருந்ததாகவும், தெரிய வந்துள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணிக்காக உடனடியாக அருகில் உள்ள விமானப் படைத்தளத்துடன்தொடர்பு கொள்ளவும், ரயில்வே நிலையம் அக்கறை காட்டவில்லை. ரயில்வே திணைக்களம் விமானப் படையுடன் தொடர்புகொண்டு உலங்கு வானூர்திகளை கோரி யிருப்பின் பெருமளவானோரின் உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும் என்றும் தற்போது தெரிய வருகிறது.

இதன் காரணமாகவே சுயாதீனஆணைக்குழுவின் விசாரணை ஒன்றை அமைச்சர்கள் கோரியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக நூல் வழங்கத்திட்டம்

தமிழர் தாயகப் பிரதேசத்தில் எதிர்வரும் ஏப்பிரலில் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த சமயத்தில் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக புத்தகங்கள்,குறிப்புகள்,பதிவுகள் போன்றவற்றை இழந்த பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பரீட்சை நெருங்கி வரும் சமயத்தில் தமதுகல்வியைத்தொடர முடியாமல் கஸ்டப்படுகிறார்கள் எனும் பத்திரிகை செய்திக்கு இணங்க பிறைட் புத்தக நிறுவனம் தனது வெளியீடுகளில் ஒரு தொகுதி நூல்களை தை மாத இறுதியில் பாடசாலைகள் தோறும் இலவசமாக கையளிக்க எண்ணியுள்ளது.

இதேவேளை எழுத்தாளர், மற்றும் நூல் வெளியீட்டாளர் வழங்கும் நூல்களையும் மாணவரை சென்றடைய வழிவகுப்போம் என்பதையும்பாடசாலைகள் வேண்டி நிற்கும் புத்தகங்களின் வகையையும் அளவையும் அறியத்தருமாறு வேண்டியுள்ளது. பாடசாலைகள் பிறைட் புத்தக நிறுவனம், வரையறையுள்ளது. S-27, முதலாம் மாடி, கொழும்பு மத்தியசந்தைத் தொகுதி, கொழும்பு -11-எனும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளுமாறும் அது வேண்டியுள்ளது.

# பிரதித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதற்கு தயாராகவுள்ளேன்

### - ஐ.தே.க பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய

ஐக்கிய தேசியத் கட்சியின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதற்கு தான் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை வகுப்பு செயற்குழுக்கூட்டத்தில் கருஜெய சூரிய இந்த அறிவிப்பை வெளியிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இறந்து போனவர்கள் மீது அரசியல் நடத்துவதற்கு தான் விரும்பவில்லை என்றும் கருஜெயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

சனாதிபதி தலைமையில் நடைபெறும் அனைத்துக் கட்சித்தலைவர்கள்கூட்டத்தில் கருஜெயசூரிய கலந்து கொள்வது குறித்து முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரட்ன மற்றும் கபீர்ஹாசிம்

ஆகியோரால் தெரிவிக்கப்பட்ட விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே கரு ஜெயசூரிய இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார். கட்சி உயர் மட்டத்தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையே தான் அனர்த்த முகாமைத்துவக் கூட்டத்தில் தெரிவித்துள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் தன் மீது தேவையற்ற விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வருவதானது கட் சியை பிளவு படுத்திவிடும் என் றும் கரு ஜெயசூரிய மேலும் தெரிவித்துள்ளார் (32)


## இடம் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

. கிளிநொச்சி நகரில் தென்இந்திய திருச்சபைக்கும் பிள்ளையார் புத்தகசாலைக்கு மிடையில் இயங்கி வந்த உயிரோடை பதிப்பகம் (ஆரோபணம் அச்சகம்) 19.01.2005 இன்று (புதன் கிழமை) தொடக்கம் தமது சேவையினை கிளிநொச்சி நகரில் வெண்புறா நிறுவனத் துக்கு எதிரே பெற்கால வர்ணக்கலையகத்துக்கு அருகே தனது சேவையை ஆரம்பிக்கின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். எம்மிடம் இரப்பர் முத்திரைகள் அச்சிடல் வேலைகள் கட்டளைகள் தந்தவர்கள் புதிய கட்டடத்தில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

உரிமையாளர்,
ப.கோகுலன்,
உயிரோடை பதிப்பகம்,
கிளிநொச்சி.

(5573)


## திறப்புவிழா

(பூநகரி)

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலக திறப்பு விழா இன்று நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ளது. வாடியடியில் அமைந்துள்ள இந்த கட்டத்திறப்புவிழாவில் பிரதமவிருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம் கலந்து கொள்கிறார். (34)


## துயர் பகிர்கிறோம்

### பெரியண்ணன் [தியாகராசா தியாகு]

### நோயாளர் நலன்புரிச்சங்கம்

மல்லாவிப்பணியாளரான செல்வி தி.இராஜலட்சுமி (ராதா) அவர்களின் அன்புத்தந்தையார் திரு.பெரியண்ணன் தியாகராசா (தியாகு) அவர்கள் 16.01.05 காலஞ்சென்ற செய்தி கேட்டு மிகுந்த கவலை அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர், பணியாளர்கள், நோயாளர்
நலன்புரிச்சங்கம் தலைமைப் பணிமனை,
கிளிநொச்சி.

(4146)

## சாவு அறிவித்தல்



### அமரர் வைரவன் நடேசன் (மணியம்)

பழையவாய்க்கால் மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட வைரவன் நடேசன் அவர்கள் 17.01.2005 இரவு அகாலச் சாவைத் தழுவிக்கொண்டார். இவர் சரஸ்வதியம்மாவின் அன்புக் கணவரும் (காலம்சென்ற) ஜெயச்சந்திரனின் தந்தையும், ஜெயக்குமார், ஜெயந்தினி, ஜெயதீபா, ஜெயசுதா ஆகியோரின் அன்புத்தந்தையும், ஞானசசியின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 19.01.2005 இன்று பி.ப.3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக படித்தமகளிர் குடியேற்றத்திட்டம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை மிருசுவில் வடக்கு, உரும்பிராய், வட்டுக்கோட்டை, பொய்ரி நீர்வேலியிலுள்ள உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

பழையவாய்க்கால், மிருசுவில். (சி-11083)

தகவல்:- குடும்பத்தினர்.



பாக்தாத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் காயப்பட்ட ஈராக்கியர் ஒருவருக்கு முதலுதவி அளிக்கும்அமெரிக்கவீரரையும் சம்பவம் இடம் பெற்ற இடத்தில் அழுது கொண்டிருக்கும் பெண்ணையும் காணலாம்.



ஈராக்கில் தேர்தல் ஒன்று அண்மித்துக் கொண்டிருக்கும் வேளை ஈராக்கிய பொலிசாரும் தேர்தல் பணியாளர்களும் தனது பதவிகளை ராஜினாமாச் செய்யும் நிலையில் மொசுல் நகரில் வீதிக் காவல் பணியில் ஈடுபடும் அமெரிக்க இராணுவத்தினர்.

# சீனத் தொழிலாளர்கள் எட்டுப் பேர் ஈராக்கில் பணயக்கைதிகளாகப் பிடிப்பு

(பாக்தாத்)

**பாக்தாத்தில் பணிபுரியும் சீனத் தொழிலாளர்கள் எட்டுப்பேர் நேற்று முன்தினம் தீவிரவாதிகளால் பிடிக்கப்பட்டு பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.**

ஈராக்கில் பணியாற்றிய தமது நாட்டைச் சேர்ந்த எட்டுத் தொழிலாளர்களை காணவில்லையென சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.

சீனாவின் உத்தியோக பூர்வ செய்தி நிறுவனமான சின்வா இதைத் தெரிவித்துள்ளது. இதே வேளை காணாமல் போன எட்டு சீனத் தொழிலாளர்களும் ஈராக் தீவிரவாதிகளினால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் வீடியோப் படத்தை சர்வதேச ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

ஈராக்கில் தீவிரவாதிகள் அமெரிக்க இராணுவத்தினரையும் அவர்களுக்கு உதவிபுரியும் வெளிநாட்டவர்களையும் கடத்திச் செல்வது தொடர் கதையாக நடந்து வருகிறது.

இதேவேளை நேற்று கிறிஸ்தவ பேராயர் ஒருவரை தீவிரவாதிகள் கடத்திச் சென்று பின்னர் விடுவித்துள்ளனர். பேராயர் கடத்தப்பட்ட சம்பவத்திற்கு வத்திக்கான் கடும் கண்டனம் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

பாக்தாத்தில் நேற்று தீவிரவாதிகள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதல் ஒன்றில் இருவர் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# இராணுவ டாங்கி சுட்டு பலஸ்தீன தாய்-மகன் பலி

(காஸா)

தெற்கு காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவ டாங்கி சுட்டதில் ஒரு பலஸ்தீனப் பெண்ணும் அவரது மகனும் பலியானார்கள்.

கான்யூனிஸ் அகதிகள் முகாமிலுள்ள ஒரு வீட்டை டாங்கி குண்டுகள் தாக்கின. இதில் 27 வயது பலஸ்தீனியரும் அவரது தாயாரும் பலியானார்கள் இன்னொருவர் காயம் அடைந்தார். இஸ்ரேல் நகரங்கள் மீது பலஸ்தீனியர்கள் ராக்கெட் வீசித் தாக்குவதைத் தடுத்து நிறுத்தும்படி இஸ்ரேல் பிரதமர் ஷரோன் இராணுவத்தை கேட்டுக் கொண்டார். அதோடு தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு இராணுவத்துக்கு முழு சுதந்திரம் கொடுத்து இருப்பதாகவும் பிரதமர் ஷரோன் அறிவித்தார். அதைத் தொடர்ந்துதான் இராணுவ டாங்கி தாக்குதல் நடத்தியது.

# சீன கம்.கட்சி தலைவர் மரணம்

(பீஜிங்)

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவர் ஜாவோ ஜியாங் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மரணமடைந்தார். அவருக்கு வயது 85 .1989 ஆம் ஆண்டு சனநாயகத்துக்கு ஆதரவாக தினாமன் சதுக்கத்தில் நடந்த மாணவர் போராட்டத்தை ஆதரித்ததற்காக கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு, வீட்டு காவலில் வைக்கப்பட்டார். 15 ஆண்டுகளாக வீட்டுக் காவலிலேயே இருந்தார்.

சுவாசக் கோளாறு, இருதய நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட அவர் பல முறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர். கடந்த வெள்ளிக்கிழமை முதல் கோமாவில் விழுந்தார். நேற்று முன்தினம் காலை அவர் மரணமடைந்தார். அவரது மகள் வாங்யன்னன் வெளியிட்டுள்ள அறிக்கையில் "காலையில் அவர் அமைதியான முறையில் மரணம் அடைந்தார். கடைசியில் அவர் சுதந்திரம் அடைந்தார்" என்று கூறியிருந்தார்.

# இரட்டை இறக்கைகளைக் கொண்ட மிகப்பெரிய பயணிகள் வானூர்தி

உலகின் மிகப்பெரிய பயணிகள் வானூர்தியான ஏ 380 நேற்று மக்களின் பார்வைக்கு கொண்டுவரப்பட்டது

இரட்டை இறக்கைகளைக் கொண்ட இந்த வானூர்தியில் 555 பேர் பயணம் செய்ய முடியும். இதேவேளை இன்றைய வைபவத்தில் பிரித்தானிய பிரதமர் டொனி பிளேயர், பிரான்சின் சனாதிபதி செக்சிராக் மற்றும் ஜெர்மனியின் அதிபர் ஜெஹாட் ஸ்ரோடர் ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர்.

# ரஷ்யப் படையினரால் — 5 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

(மொஸ்கோ)

ரஷ்யாவில் இரண்டு கட்டடங்களில் புகுந்து கொண்டு பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்திய ஐந்து தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

செசன்யாவின் அருகிலுள்ள டகெஸ்டான் குடியரசின் தலைநகர் மக்காச் கலாவில் கடந்த சனிக்கிழமை நுழைந்த தீவிரவாதிகள் இரண்டு கட்டங்களில் புகுந்து கொண்டு அங்கிருந்தவர்களை பிணைக் கைதிகளாக பிடித்து வைத்துக் கொண்டனர்.

ரஷ்ய அதிரடிப்படையினர் தீவிரவாதிகளை சரணடையும் படி எச்சரித்தனர். சரணடைய மறுத்த தீவிரவாதிகள் கட்டடத்திலிருந்தவர்களை விடுவித்தனர். அதன் பிறகு தீவிரவாதிகள் தங்கியிருந்த கட்டடத்தின் மீது அதிரடிப் படையினர் கடுமையாகத் தாக்குதலை நடத்தினர். பதிலுக்கு தீவிரவாதிகளும் தாக்குதல் நடத்தினர்.

இதில் அதிரடிப்படை அதிகாரியொருவர் பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்தார். 15 மணி நேர போராட்டத்திற்குப் பிறகு தீவிரவாதிகள் ஒளிந்திருந்த கட்டடத்தை பீரங்கியின் உதவியால் அதிரடிப்படையினர் தரை மட்டமாகத் தகர்த்தனர் . இதில் ஐந்து தீவிரவாதிகளும் பலியாகினர்

இதேவேளை ரஷ்யாவில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் பெஸ்லான் நகரப்பள்ளியில் புகுந்து கொண்ட தீவிரவாதிகள் பள்ளியில் இருந்தவர்களை பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டனர். ரஷ்ய அதிரடிப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே பயங்கரச் சண்டை நடந்தது. தீவிரவாதிகள் பள்ளிக் கூடத்தை வெடி வைத்து தகர்த்ததில் ஏராளமான பள்ளிக் குழந்தைகள் உட்பட 330 பேர் பலியாயினர்.

# சுனாமியால் சீரழிந்த கிராமம் கவனிப்பார் யாரும் இல்லை

(ஜகார்த்தா)

சுனாமி தாக்கி மூன்று வாரங்களுக்கு மேலாகியும் இந்தோனேசிய கடற்கரைகளில் இன்னும் சடலங்கள் ஒதுங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்தோனேசியாவில் கடந்த மாதம் சுனாமி தாக்கியது. இங்கு மட்டும் இதுவரை ஒரு இலட்சத்து 16 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். ஆனால், இந்த எண்ணிக்கை இதோடு நிற்கவில்லை. சடலங்கள் இன்னும் கரை ஒதுங்கிக் கொண்டிருக்கின்றன. பெருத்து, அழுகிய சடலங்களை நாய்கள் குதறும் காட்சிகளைப் பல இடங்களில் காண முடிகிறது.

பண்டா ஆசேயில் முக்கிய இடங்களில் மட்டுமே மீட்புப் பணியும், நிவாரணப் பணிகளும் நடக்கின்றன. இவ்விடத்தில் இருந்து பல கிலோமீற்றர் தொலைவிலுள்ள லோக்நகா என்ற தூரத்து கிராமத்தைக் கண்டு கொள்வார் யாரும் இல்லை. இங்கு வசித்த 15 ஆயிரம் மக்களில் இன்று பெரும்பான்மையானோர்இல்லை. சுனாமிக்கு பலியாகி விட்டனர். மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்த இம்மக்கள் உடைந்த பாலத்தின் மீது வெறித்த பார்வையுடன் அமர்ந்துள்ளனர். அவர்களின் உறவினர்களும், நண்பர்களும்உணவுகளைக் கொடுத்து உதவிவருகின்றனர்.

# மெக்காவில் தீ விபத்து யாத்திரிகர்களுக்கு பாதிப்பில்லை

சவூதி அரேபியாவில் மெக்காவிலுள்ள பெரிய மசூதியில் நேற்று முன்தினம் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் தொழுகை நடத்திக் கொண்டு இருந்தார்கள். அப்போது அங்கிருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் காஜ்ஜா என்ற பகுதியிலுள்ள அடுக்கு மாடிக் கட்டடம் ஒன்றில் தீவிபத்து ஏற்பட்டது. முதலில் கட்டடத்தில் இருந்து புகை வருவதை பார்த்த ஹஜ் பயணிகள் சிலர் அதுபற்றி அங்குள்ளவர்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

உடனே தீயணைப்பு படையினர் விரைந்து தீயை அணைத்தனர். இந்தப் பணியில் உலங்குவானூர்தியும் ஈடுபடுத்தப்பட்டது. தூரத்திலுள்ள கட்டடத்தில் தீப்பிடித்து புகை வருவதைக் கண்டதும் தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் எழுந்து நின்று பார்த்தனர். இந்த தீ விபத்தினால் ஹஜ் பயணிகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

கடந்த 1997 ஆம் ஆண்டு மெக்கா அருகே உள்ள மினா என்ற இடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 340 ஹஜ் பயணிகள் பலி ஆனார்கள். அந்த விபத்தை தொடர்ந்து அசம்பாவித சம்பவங்கள் ஏற்படாமல் தடுக்க சவூதி அரேபிய அரசு ஒவ்வொரு ஆண்டும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துவருகிறது.

# 200 பயணிகள் காயம்

தாய்லாந்தில் சுரங்க ரயில்கள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டதில் 200 பயணிகள் காயமடைந்துள்ளனர். தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் சாலை போக்குவரத்து நெரிசலை தவிர்க்க கடந்த ஆண்டு ஜுலை மாதம் சுரங்க ரயில் போக்குவரத்து தொடக்கப்பட்டது. பயணிகளை அதிகம் கவர்வதற்காக கடந்த 7ஆம் திகதி சுரங்க ரயில் கட்டணங்கள் குறைக்கப்பட்டன. இந்நிலையில் நேற்று முன்தினம் காலை சுரங்கப் பாதையில் நின்று கொண்டிருந்த ஒரு ரயில் மீது பின்னால் வந்த மற்றொரு ரயில் பயங்கரமாக மோதியது. இந்த விபத்தில் 200 பேர் படுகாயமடைந்தனர். கணினி கோளாறு காரணமாக ரயில் போக்குவரத்தில் குளறுபடி ஏற்பட்டு இந்த விபத்து நடந்ததாகக் கூறப்படுகிறது.



இந்தோனேசியாவின் பண்டா ஆசே மாநிலத்தில் சுனாமி பேரலை தாக்குதலால் சேதமடைந்த. வீதியில் கிடக்கும் படகை அப்புறப்படுத்தும் புல்டோசரை காணலாம்.



சீனாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் பணியாற்றி விபத்தில் பலியான ஒருவரை மீட்புப் பணியாளர்கள் கொண்டு செல்கின்றனர்.

## முல்லை மாவட்ட செயலணிக்குழுவினர் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் சந்திப்பு

### -வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தத் தீர்மானம்



சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லை நகரிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கான இடைத்தங்கல் முகாம்களையும் அதனோடு தொடர்புடைய வேலைத்திட்டங்களையும் செய்வதற்காக பொறுப்பேற்ற அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளை நேற்று முன்தினம் முல்லை மாவட்ட செயலணிக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

மேற்படி முகாம்களை அமைப்பதில் ஏற்பட்ட மந்தநிலையை அடுத்து அச்செயற்பாடுகளை விரைவுபடுத்தும் முகமாக நடாத்தப்பட்ட இக்கலந்துரையாடலில் வேலைத்திட்டங்களை பொறுப்பேற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டு தமக்குரிய வேலைத் திட்டங்களை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். பிற்பகல் 3.30 மணிக்கு அவசரகால செயல ணிக் குழுவின் முல்லைத்தீவு செயலகத்தில் செயலணிக்குழுத் தலைவர் ஈழமாறன் தலைமையில் நடைபெற்ற இவ் ஒன்று கூடலில் முல்லை மாவட்ட அரசியல் துறைபொறுப்பாளர் முகுந்தன் உட்பட செயலணிக்குழுவைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். (ச)

## சுனாமி வருகிறது என்ற வதந்தியால் மக்கள் விழுந்தடித்து ஓட்டம்

### -அம்பாறையில் சம்பவம்

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், திருக்கோயில் பிரதேசங்களில் சுனாமி வருகிறது என சனிக்கிழமை இரவு மக்கள் பீதியடைந்து விழுந்தடித்து ஓடினர்.

இதனையடுத்து அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் போராளிகள் சிலர் கடற்கரைப் பகுதிக்குச் சென்று நிலைமைகளை அவதானித்து மக்களுக்குத் தெரியப்படுத்தினர்.இதேவேளை பொய் வதந்திகளையும், பிரசாரங்களையும் கேட்டு மக்கள் அச்சமடையத் தேவையில்லை. எமது அரசியல்துறைப் போராளிகள் கடற்கரைப் பகுதிகளில் அவதானிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.ஏதாவது மாற்றங்கள்அவதானிக்கப் படுமாயின் அதுபற்றி அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

## முல்லை. மகாவித்தியாலயம் தற்காலிக கொட்டகையில் இயங்கும்

(முல்லை)


முல்லைத்தீவு மகாவித்தியாலயம் சுனாமி அனர்த்தத்தினால் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்குடன் பழைய இடத்திலேயே தற்காலிக கொட்டகை அமைத்து எதிர்வரும் 20.01.2005 தொடக்கம் நடைபெறவுள்ளதென அதிபர் ம.அன்ரனி ஜெயநாதன் தெரிவித்தார்.

அத்துடன் முல்லைத்தீவு றோ.க.வித்தியாலயம் கரைச்சி குடியிருப்பு பகுதியில் எதிர்வரும் 20.01.2005 அன்றே ஆரம்பமாகவுள்ளது எனவும் வித்தியாலய அதிபர் தெரிவித்தார். (20)

## சனாதிபதியின் அவசரகாலச் சட்டப் பிரகடனம் தமிழர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கை!

### -மலையக மக்கள் முன்னணித் தலைவர் கண்டனம்



**"சிறிலங்காவைத் தவிர சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகள் எவற்றிலும் அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத்தப்படவில்லை. ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவசரகாலச் சட்டத்தை சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் பிரகடனப்படுத்தியுள்ளமை தமிழர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கையாகும்". இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.**

அவர் இது பற்றி ஊடகமொன்றுக்குத் தெரிவிக்கையில்;

சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அவசர கால சட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. இது எதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நான் வடகிழக்கைச் சேர்ந்த பல பிரதேசங்களுக்குச் சென்றிருக்கின்றேன். அங்கே தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடைபெறுகின்ற நிவாரண உதவிகள் எத்தகைய விதத்திலே வழங்கப்படுகின்றன என்பதைப் பற்றியும் அறிய முடிந்திருக்கின்றது. அதனடிப்படையிலே இன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம், வெளிநாட்டிலே வாழ்கின்ற தனியார் உதவி மற்றும் மலையக மக்கள் தங்களுடைய சம்பளத்திலேயே ஒரு நாள் சம்பளத்தை ஒதுக்கி அதன் மூலம் கிடைக்கும் பணத்தின் மூலம் நிவாரண உதவிகளை அந்தப் பிரதேசத்திற்கு கொண்டு சென்று கொடுத்துள்ளார்கள். கொடுத்து வருகின்றார்கள். அதேபோல் லண்டன் துர்க்கையம்மன் ஆலய நிதியமும் கூட பெரியளவிலே உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்றது.

இந்நிலையிலே இந்த அவசர காலச்சட்டம் பிரயோகிக்கப்படுவது என்ன காரணத்திற்காக என்பது புரியவில்லை. இதிலே ஒரு விடயத்தை நாங்கள் அவதானிக்க வேண்டும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் வந்திருக்கும் போது கூட சிறிலங்கா அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்லக் கூடாது எனத் தெரிவித்து தடுத்துள்ளது.

இந்நிலையில் அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதன் மூலம் வடகிழக்கிற்கும் அல்லது குறிப்பாக சிறுபான்மை தமிழ் மக்கள் வாழுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு உதவிகள் வெளியிடங்களில் இருந்து போவதைத் தடுப்பதற்காகக் கூட இந்தச் சட்டம் பயன்படுத்தப்படலாம். வெளிநாடுகளில் இருந்து வருகின்ற உதவிகள் எதுவுமே அரசாங்கத்தினூடாகத் தான் செல்ல வேண்டும். தன்னிச்சையாக அவர்கள் நேரடியாக அவர்களிடம் இந்த உதவிகளை கைளிக்கக்கூடாது என்பதற்குக் கூட இந்தத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படலாம்.

இந்த அவசர கால சட்டத்தைப் பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டும். சனாதிபதியின் முழுமையான அதிகாரமுள்ள சட்டம் இது இந்தச் சட்டத்தின் மூலம் எந்தவொரு நிபந்தனையையும் அல்லது எந்தவிதமான செயற்பாடுகளையும் அவர்கள் செய்ய முடியும். அந்த அடிப்படையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை தனிமைப்படுத்துவதோ அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அரசாங்கத்தின் நிவாரண உதவிகளில் தங்கியிருக்க வேண்டுமென்பதை நிர்ப்பந்தப்படுத்துவதற்கோ இந்தச் சட்டம் பயன்படுத்தப்படலாம். ஆகவே இந்தத் தடைச்சட்டம் நிச்சயமாக சிறுபான்மை தமிழ் மக்களைத் தான் பெரியளவிலே பாதிக்குமென்று நான் நினைக்கின்றேன் எனவும் தெரிவித்தார். அவர் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட எந்த நாட்டிலும் அவசர காலச் சட்டம் பிரயோகிக்கப்படவில்லை இந்தியாவில் கூட அவர்கள் யுத்த கால நடைமுறையை செயற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். யுத்தகால நடைமுறையென்று சொன்னால் நாட்டுப்பற்றோடு மனிதாபிமான ரீதியிலே என்ன என்ன உதவிகள் என்ன வகையில் கிடைக்கின்றதோ அதையெல்லாம் செய்வதற்கு அனுமதியளிக்கும் விதத்தில் தான் இந்தச் சட்டம் உள்ளது. ஆனால் அவசர காலச்சட்டம் அப்படியல்ல. அவசரகாலச் சட்டம் என்பது அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் யாரும் செயற்படக்கூடாது. அரசாங்கம் நினைத்தால் எந்தவொரு செயற்பாட்டையும் நிறுத்தி விடலாம். தொடர்ச்சியாக செயற்படுத்த விடாமல் தடுக்கலாம். அவசர காலச் சட்டம் ஏற்கனவே அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட போது பல ஆண்டுகளாக சிறுபான்மைத் தமிழ்மக்கள் தான் பெரியளவிலே இதிலே பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே இந்தச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்களை ஏதோ ஒரு விதத்திலே கட்டுப்படுத்துவதாக அல்லது அவர்களை அடக்குவதற்கான ஆயுதமாகப் பயன்படுத்த அரசாங்கம் நினைக்கின்றதோ என்று தான் சந்தேகிப்பதாகவும் தெரிவித்தார்.

இதனால் மிகப்பெரிய பாதிப்பு தமிழ் மக்களுக்கு ஏற்படும். குறிப்பாக மலையகத்திலிருந்து வடகிழக்கிற்குச் சென்று நிவாரண உதவிகளை வழங்கியவர்களைக் கூட அடையாளங்கண்டு அவர்களிடம் வாக்குமூலம் பெற்று எதற்காக அங்கு சென்றீர்கள், யாரைச் சந்தித்தீர்கள், என்ன நடந்தது என்பதையெல்லாம் கேட்டு அவர்களைச் சட்டத்தின் பிடியிலே சிக்கவைப்பதற்குக் கூட இந்தச் சட்டம் வழிவகுக்கும்.

இந்தச் சட்டம் ஆபத்தானதென்று தான் கருதுவதாகவும் தெரிவித்த அவர், இச் சட்டத்தை மலையக மக்கள் முன்னணி மறுதலிக்கிறது, அல்லது கண்டிக்கின்றதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வட்டக்கச்சியில் குற்றத்தடுப்பு நடவடிக்கை கசிப்பு உற்பத்தி பொருட்கள் சில மீட்பு!

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி காவல் பணிமனையினரால் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு அங்கமாக கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை அண்மை நாட்களாக தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

வட்டக்கச்சி பிரதேச காவல்துறையினரால் வட்டக்கச்சி புழுதியாற்றுப் படுக்கையில் கசிப்பு உற்பத்தி பொருட்களான 250 லீற்றர் கோடா, 2 பரல்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை தொடர்ந்தும் இந்நடவடிக்கை செயற்படுத்தப்படும் என வட்டக்கச்சி காவல் பணிமனைப் பொறுப்பதிகாரி கிங்ஸ்சிலிதாஸ் தெரிவித்தார். (15)

## சிலாவத்தை விவசாயிகளின் இழப்புக்கள் குறித்து கலந்துரையாடல்

(முல்லை)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிலாவத்தை விவசாயிகளின் அழிவுகள் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டப் பொறுப்பாளர் பூங்குன்றன் தலைமையில் ஆரம்பமானது.

இதில் சுனாமியால் அழிக்கப்பட்ட நெற்பயிர்கள், கால்நடைகள், பயன்தரு மரங்கள், குளங்கள், குட்டைகள், வாய்க்கால்கள், மேட்டுப்பயிர்கள் என்பவற்றின் விபரங்கள் புள்ளி விபர ரீதியாக திரட்டப்படுவதற்கான விபரங்கள் பரிமாறப்பட்டன.

இக்கலந்துரையாடலில் த.பொ.மே நிறுவனப் பிரதிநிதிகள் பெரும்பாக உத்தியோகத்தர்கள், கால்நடைவைத்தியர்கள், விவசாயிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## நீர் வெளியேற்றும் பகுதியை சீர்ப்படுத்த வேண்டுகை

(கிளிநொச்சி)

இராமநாதபுரம் பகுதியில் இருந்து வட்டக்கச்சி சந்தையடியிற்குச் செல்லும் வீதியின் நாவலடியில் உள்ள மேலதிக நீர் வெளியேற்றும் பகுதி (கோஸ்வே) யில் அதிகளவான மணல் காணப்படுவதால் இப்பகுதி மிக மோசமாகச் சேதமடைந்து தொடர்ந்து வாய்க்கால் நீர் வெளியேறிய வண்ணம் இருப்பதாலும் போக்குவரத்துச் செய்வதில் பொதுமக்கள் மிகுந்த இடரினை எதிர்கொள்வதைக் காணமுடிகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் இம் மணலினை அகற்றி பொதுமக்களின் இயல்பான பயணத்திற்கு வழி அமைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (15)

## முச்சந்தியில் காணப்படும் மேட்டுப்பகுதியால் ஆபத்து!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-கோவிந்தன் கடைச்சந்தியில் அமைந்துள்ள முச்சந்தியில் காணப்படும் மேடான பகுதி போக்குவரத்திற்குப் பெரும் இடையூறாகவுள்ளது.

வட்டக்கச்சி-கிளிநொச்சி, திருவையாறு-கிளிநொச்சி வீதிகள் சந்திக்கும் மையப் பகுதியில் அமைந்துள்ள இவ் மேட்டுப்பகுதியினால் போக்குவரத்திற்குப் பெரும் இடையூறாக உள்ளது. எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய கவனம் செலுத்தும் படி பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (15)

## இரு சடலங்கள் முல்லைத்தீவில் மீட்பு

(முல்லை)

முல்லைத்தீவு கள்ளப்பாட்டு பகுதியில் நேற்று முன்தினம் இரண்டு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் பெண்களுடையவையாகும். அவை அவ்விடத்திலேயே எரிக்கப்பட்டன. (20)

## சுனாமியால் அழிந்த வீட்டு விபரங்கள் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த அழிந்த வீட்டு விபரங்களை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரா்லயம் (யு.என்.எச்.சி.ஆர்) சேகரித்து வருகிறது.

வடமராட்சி வடக்கு வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் இவ்வாறான வீட்டு விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது வடமராட்சி வடக்குப் பகுதியில் சுப்பர் மடம், மயிலிட்டித்துறை, இன்பருட்டி, சக்கோட்டை பகுதிகளில் இவ்வாறான பதிவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி நிறுவன வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்காகவே இவ்விபரம் சேகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (45)

## ஐ. நா. சபை வதிவிடப்பிரதிநிதி யாழ்.இல் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

ஐ.நா.சபை வதிவிடப் பிரதிநிதி மைக்கல் பேனியோ என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி பகுதிக்கு விஜயம் செய்தார். இவர் இங்கு வந்து பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டதோடு கடற்றொழிலாளர் சமாச பிரதிநிதிகளையும் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

இவர் மக்களது இழப்புகளை நீண்ட நேரம் பார்வையிட்ட போது கடற்றொழிலாளர் சமாசத்தினர் சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்புக்களை விபரித்தனர். அடுத்து தொழில் கட்டுமானப் பணியை நிறைவு செய்து தரவேண்டும் என்று கேட்டனர். அதைஅப்பிரதிநிதி ஏற்றுக் கொண்டுள்ளார். யு.என்.டி.பி. நிறுவனத்தால் வழங்கப்பட்ட அத்தனை கடன்களையும் இன்றிலிருந்து ரத்துச் செய்வதாகவும் அப்பிரதிநிதி தெரிவித்தார். "நான் உங்கள் தொழிலுக்கான உதவியைச் செய்து தருகிறேன்" எனக் கூறினார்.

எங்கள் தொழிலை நவீனமயப்படுத்த வேண்டும் என்று கேட்டோம் அதற்கு அவர் மறுக்கவில்லை. அதற்குரிய படகுகளையும் உபகரணங்களையும் தருவதாகக்கூறினார் என்று சமாச செயலாளர் சூரிய குமார் தெரிவித்தார். (45)

## சுனாமி அனர்த்த நிதியத்திற்கு பங்களிப்புச் செய்க யாழ். மாவட்ட தே. எழுச்சிப் பேரவை கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

**சுனாமி கடற்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு உதவிகளை வழங்குவதற்கான நிதிப் பங்களிப்புகளைச் செய்வதற்கு முன்வருமாறு யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.**

தமிழீழ தேசியத் தலைவரின் வழிகாட்டலில் செயற்பட்டுவரும் தேசிய எழுச்சிப் பேரவையானது சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறுபட்ட மனித நேய உதவிகளையும் வழங்கி வருகின்றது.

அந்த வகையில் "சுனாமி அனர்த்த நிதியம்" என்ற ஓர் அமைப்பினை நிறுவி அந்நிதியத்தினூடாக சேகரிக்கப்பட்ட சுமார் 20 லட்சம் ரூபாவைக் கொண்டு தேசிய எழுச்சிப் பேரவையினர் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடாநாட்டு மக்களுக்கு நிவாரண உதவிகளையும் வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடைய வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவைப்பாடு இருப்பதனால் மேலும் நிதி உதவிகளை வழங்க முன்வருமாறு புலம்பெயர் மற்றும் தாயக வாழ் தமிழர்களுக்கு யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அழைப்பு விடுத்திருக்கிறது. (33)

## யாழ். இல் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்க கொரிய நிறுவனம் நடவடிக்கை

கொரிய நாட்டு அரச சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையம் யாழ்.மாவட்டத்தில் சுனாமி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட சகல பாடசாலை மாணவர்களுக்கும் கற்றல் உபகரணத் தொகுதிகளை வழங்கவுள்ளது. இவை யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ செயலணியின் கட்டுப்பாட்டில் வழங்கப்படும். இப்பொருட்கள் ஒரு சில நாட்களில் கப்பல் மூலம் கொரியாவிலிருந்து வந்து சேரும்.

இத்தகவலை யாழ்.வந்துள்ள கொரிய நாட்டு அரச சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலைய இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி யாங் அஸ்டொக்ஸ் தெரிவித்துள்ளார். இவர் வடமராட்சி அனர்த்த முகாமைத்துவ செயலணித்திட்ட முகாமையாளர் பாலையா, பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன், இமையவன் மற்றும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் யோகராஜன் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டார்.

இதேவேளை யுனிசெவ் நிறுவனம் சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் திட்டத்தில் முதல் கட்டமாக 2280 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளது. (45)

## உள்ளூராட்சி ஆணையாளர் வடமராட்சிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் விஜயலட்சுமி வடமராட்சி பகுதிக்கு விஜயம் செய்து சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

வடக்கு கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையாவுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்பகுதிக்கு விஜயம் செய்து பார்வையிட்டுள்ளார்.

இவர் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபை பிராந்தியங்களைப் பார்வையிட்டதோடு, மருதங்கேணிப் பகுதியையும் பார்வையிட்ட பின்னர் திருகோணமலைக்கு உடனேயே திரும்பியுள்ளார். (45)

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு சு.சேவையால் மருத்துவ அட்டை

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும் நோய்களில் இருந்து தவிர்த்துக் கொள்வதற்காக பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் மருத்துவ அட்டை வழங்கப்படுகின்றது.

இந்த அட்டை அரசசுகாதார சேவைகள், தமிழீழ சுகாதார சேவைகள் ஒருங்கிணைந்த சுகாதார சேவைகள், செயலகத்தினால் யுனிசெவ் அனுசரணையுடன் வழங்கப்பட்டு வருகிறது.

ஆரம்பகட்டமாக வட மராட்சி வடக்கு பகுதியில் மருத்துவ அட்டைகள் வழங்கப்படுகின்றன.

யாழ். மாவட்ட சுனாமி அனர்த்த புனர்வாழ்வு செயலணியின் சுகாதார ஒழுங்கமைப்புக் குழுவினரால் 300 சுகாதாரத் தொண்டர்கள் நேற்று முன்தினம் முதல் சுகாதாரப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமிழீழ சுகாதாரசேவை, தமிழர் புனர்வாழ்வுக்கழகம், யுனிசெவ் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பாதிக்கப்பட்ட இடங்களில் சுகாதாரப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இவர்கள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பரவும் தொற்று நோய்களை இனங்காணல், சுகாதார சீரழிவுகளைக் கட்டுப்படுத்தல், தனிநபர் சுகாதாரம் பேணுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கான விசேட பயிற்சிகளையும் தமிழீழ சுகாதார சேவை வழங்கி வருகிறது. (33,45)

## கல்விச் சேவை செயலகம் வடமராட்சியில் திறப்பு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்குடன் கல்விச் சேவைகள் செயலகம் ஒன்று நெல்லியடியில் அண்மையில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இதன் ஒருங்கிணைப்பாளராக புஸ்பதாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு அனுசரணையாளர்களாக செயற்படுத்துவற்கு யுனிசெவ்,சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

இந்தச் செயலகம் பாதிக்கப்பட்ட மாணவர்களின் விபரங்களை சேகரித்து அவர்களுக்கான கல்வி மற்றும் உபகரணங்கள், சீருடைகள் என்பனவற்றை வழங்குவதுடன் சேதமடைந்த பாடசாலைகளுக்கான தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. (45)

## வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்திற்கு சுனாமியால் ஒரு கோடி 10 இலட்சம் ரூபா நட்டம்

**- பொது முகாமையாளர் யாழ்.அரச அதிபருக்கு அறிவிப்பு**

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சுனாமி அனர்த்தத்தால் ஒரு கோடி பத்து இலட்சம் ரூபாவுக்கு சொத்தழிவு ஏற்பட்டுள்ளது என யாழ்.அரச அதிபருக்கு பொது முகாமையாளர் புள்ளி விபரங்களுடன் தெரிய வைத்துள்ளார்.

இக்கூட்டுறவுச் சங்கத்தின் தாளையடி, வத்திராயன் வடக்கு, உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, முள்ளியான், செம்பியன்பற்று, மாமுனை, பொற்பதி, மணற்காடு போன்ற பத்து சங்கக் கிளைகள் முற்றாக அழிந்துள்ளன.

மேற்படி அழிந்த சங்கக்கிளைகளில் ரொக்கப் பொருள், நிவாரணம், கட்டடப் பெறுமதி, தளபாடம் ஆகியவை அழிந்துள்ளன.விற்பனைப் பொருளாக இருபது இலட்சத்து ஆறாயிரத்து எண்ணூறு ரூபாவும் இலவச நிவாரணப் பொருளாக இருபத்திரெண்டு இலட்சத்து இருபத்து மூவாயிரத்து இருநூற்று இருபத்தெட்டு ரூபாவும் 10 கிளைக் கட்டடங்கள் அழிவாக அறுபத்தியிரண்டு இலட்சம் ரூபாவும், தளபாடங்களுக்கு ஐந்து இலட்சத்து ஐம்பத்தொன்பதினாயிரம் ரூபாவும் சேதமேற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சங்க முகாமையாளர் 11.01.2005 இல் அரச அதிபருக்கு இதனைத் தெரியப்படுத்தியுள்ளார்.(45)






பொங்கு தமிழின் நான்காம் ஆண்டு நிறைவு நிகழ்வு. (படங்கள் - சீலன்)

# ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

பகுதி-02



**கடல்** குமுறி அடித்தவேளை அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக முயன்று இயலாத தறுவாயில் அருகில் உள்ள பனைமரம் ஒன்றில் ஏறி தனது உயிரைப் பாதுகாத்துக்கொண்ட முல்லைத்தீவு கோயில் குடியிருப்பைச் சேர்ந்த 42 வயதுடைய கதிரவேலு தமிழ்ச்செல்வன் என்பவர் அங்கு தான் கண்ட காட்சிகளை விபரிக்கையில்

கடந்த 26ஆம் திகதி நான் வழமை போலவே எனது வீட்டில் இருந்து சின்னாத்துப்பாலம் தாண்டி கப்பல் ஏந்திமாதா கோயிலுக்கு அருகாக எனது வழமையான தொழிலுக்காகச் சென்றுகொண்டிருந்தேன். சாதுவாக மழைத்தூறல் ஏற்பட்டது. நான் அதில் நனைந்துவிடாது இருப்பதற்காக அருகில் உள்ள வீடு ஒன்றில் ஒதுங்கிக்கொண்டேன். சற்று நேரத்தில் மழைத்தூறல் நின்றுவிட்டது. அதனால் நான் தொழிலுக்கான பயணத்தைத் தொடர்ந்தேன். நேரம் 8.30 மணிதான் இருக்கும். அப்போது கடற்கரையில் இருந்து 'கிபிர்' விமானம் வருவதுபோல ஒரு இராட்சத இரைச்சல் மனதை பயமுறுத்தும் வண்ணம் கேட்டது. நான் பயந்துபோனேன். திடீரெனக் கடற்கரையை அவதானித்தேன். அப்போது பெரிதாக ஒன்றும் கண்ணுக்குத் தெரியவில்லை. நான் தொடர்ந்தும் நடந்துகொண்டே இருந்தேன். திடீரென கடலை மீண்டும் பார்த்தேன். மலைபோல கடல் மேலே எழுந்துவந்துகொண்டிருந்தது. அப்போது எனக்குக் காலும்ஓடவில்லை கையும் ஆடவில்லை. ஏன் என்னையே நம்பமுடியவில்லை. ஆனால் கடல் உருண்டு பிரண்டு ஆவேசமாக வந்துகொண்டிருந்தது. நான்தான். அதை முதலில் கண்டிருக்கவேண்டும் கடல் வருகுது எல்லாரும் ஓடுங்கோ என்று கத்தியவாறு நான் திரும்பி ஓடி வந்து கொண்டிருந்தேன். என்னால் ஓடமுடியவில்லை. ஆனால் கடல் என்னைப் பிடித்துவிட்டது. கடல் என்னைப்பிடிக்கவும் நான் அருகில் உள்ள பனையில் வேகமாக ஏறவும் சரியாக இருந்தது. மரத்தில் ஏறியவாறு பார்த்தேன் ஆக்கள் எல்லோரும் கதறி அடித்து ஓடிக்கொண்டிருந்தார்கள். எங்கும் அழுகுரல் ஓலம் சில நொடிகளில் கடல் அவர்களை யெல்லாம் தள்ளிக்கொண்டு போனது. முதலாவது அலை 10 அடிக்கும் அதிகமான உயரத்தில் கிராமங்களுக்குள் போனது.

கடற்கரையில் நின்ற மீன்பிடிப் படகுகள் ஓட்டி இல்லாமலும் இயந்திரம் இல்லாமலும் வேகமாக ஓடிவந்தன. படகுகள் இப்படி ஒருநாளும் வேகமாக ஓடியதை நான் கண்டதேயில்லை. மீன்பிடி வலைகள் எல்லாம் கடல் அலையுடன் குலைந்து போய்க்கொண்டிருந்தன. உயிரைக்காப்பாற்றுவதற்காக ஓடியவர்களை கடல் அடித்துக்கொண்டுபோனது.

பலர் தத்தளித்துக்கொண்டிருந்தனர். கட்டடங்கள் எல்லாம் கடல் அடி யில் நொருங்கிவிழுந்தன. மரங்கள் அனைத்துமே முறிந்து விழுந்தன. முறிந்த மரங்களையெல்லாம் கடல் நீர் காவிச்சென்றுகொண்டிருந்தது. நான் ஏறிய மரமும் பலமாக ஆடியது. கடல் நீரின் வேகம் நான் நின்ற மரத்தை பயங்கரமாகத் தள்ளியது. மரம் முறிந்து விழுவது போல ஆடியது. நான் மரத்தில் இருந்து "ஐயோ கடவுளே" என்று கத்திக்கொண்டிருந்தேன்.




பார்க்குமிடமெல்லாம் கடல்தான் தெரிந்தது. கட்டடங்கள் எதுவுமே தெரியவில்லை. ஆங்காங்கே சிலர் தங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தத்தளித்துக்கொண்டிருந்தனர். ஒரு தாய் தனது இரண்டு பிள்ளைகளுடன் தத்தளித்துக்கொண்டிருந்தார். சில நிமிடங்களில் அவரது கைப்பிடியில் இருந்த இரண்டு பிள்ளைகளும் பறியுண்டு கடல் நீரின் வேகத்துடன் போய்க்கொண்டிருந்தனர். அந்தத்தாயும் அடியுண்டு போய்க்கொண்டிருந்தார். இப்படித்தான் இன்னொரு தகப்பனார் தனது குழந்தைகளையும் மனைவியையும் காப்பாற்றிவிட வேண்டும் என்பதற்காக நீண்ட நேரமாக அந்தக் கடல் நீரின் வேகத்துடன் மூர்க்கத்தனமாகப் போராடிக் கொண்டிருந்தார். இறுதியில் அவராலும் முடியவில்லை. ஒவ்வொருவராகப் பறியுண்டு இறுதியில் அனைவருமே அடிபட்டுப் போனார்கள். இப்படி ஏராளம் காட்சிகள் யார் யாரைக் காப்பாற்றுவது. இந்தக் கோரமான சம்பவங்களை என்னால் பார்க்க இயலவில்லை

எனது குடும்பத்தின் நிலை என்ன அவர்களும் இப்படித்தானா...? என்ற கேள்வி என்னை இன்னும் வாட்டியது.

நான் கடலைப் பார்த்தேன் அது இரண்டாம் முறையாகவும் மூசியடித்துக் கொண்டு உருண்டு பிரண்டு பெரும் ஆவேசமாக வந்து கொண்டிருந்தது. அது வந்த வேகத்தையும் அதன் தன்மையையும் பார்த்த போது எனது மரம் தாங்கும்போல் தெரியவில்லை, இந்த அலையுடன் நானும் செத்து விடுவேன் என்று தான் நினைத்தேன். இப்போது என்னால் கத்தவும் முடியவில்லை. கத்தியும் பலனும் இல்லை யார் தான் வரப் போகிறார்கள். பார்த்துக் கொண்டிருக்க மரங்கள் வேருடன்சாய்ந்து விழுகின்றன. அவ்வாறு சாய்ந்த மரங்கள் கடலின் வேகத்துடன் வந்து எனது மரத்துடன் மோதி அடித்துக் கொண்டு போனது. இரண்டாவது கடலுடன் கட்டடங்கள் எதுவுமே தெரியவில்லை. அனைத்தும் தூள் தூள் ஆகிப்போனது. எனது மரம் அதிர்கிறது. நான் மரத்தில் இருந்து கொண்டே பார்த்தேன் எங்கும் கடலாகவே

**மீட்பு பணியாளர்களால் மீட்கப்பட்டு உயிர் பிழைத்த ஒருவருடன் சில நிமிடங்கள்...**



தெரிந்தது. எனது இதயம் நின்று விடும் போல தெரிந்தது. மூன்றாவது முறையும் இப்படியே கடல் மீண்டும் பொங்கியது. அதே போல் கடல் நீர் கோரமாக உருண்டு பிரண்டு பெரும் இரைச்சலுடன் ஓடி வந்து கொண்டிருந்தது.

இப்படித் தொடர்ந்து ஆறு தடவைகள் கடல் நீர் மூர்க்கமாக கிராமங்களுக்குள் புகுந்தது. ஆறு தடவையும் ஒரே மாதிரியான வடிவில் ஒரே உயரம் வரை எழுந்து உருண்டுபிரண்டு கடல் பொங்கியது. இதை நான் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தேன். எனது கண்ணைக் கூட என்னால் நம்ப முடியாமல் இருந்தது.

இப்படியே ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக மரத்திலேயே இருந்தேன். 20 நிமிடங்களின் பின்னர் தண்ணீர் மெதுவாக வடிந்து கொண்டிருந்தது. நான் எல்லாத்திசையும் பார்த்துக் கொண்டே இருந்தேன். எவரையும் காணவில்லை.



சிறிது நேரத்தின் பின்னர் மீட்புப் பணியாட்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும் எனக்கு சற்று ஆறுதலாக இருந்தது. ஆனாலும் எனக்கு மரத்தை விட்டு கீழே இறங்கப் பயமாக இருந்தது. நான் மரத்தில் இருந்தே கத்தினேன். அவர்கள் அதைக் கேட்டு விட்டார்கள். உடனே என்னருகில் வந்து மரத்தில் இருந்து வேகமாக இறங்கி ஓடி வாருங்கள் கடல் மீண்டும் வரப்போகிறது என்று கூறினார்கள். நான் மரத்திலிருந்து கீழே இறங்கி அவர்களுடன் போய்

**அ.லோகீசன்**

றோட்டில் ஏறிவிட்டேன். இந்தக் கோரத்தை அது செய்த பேரவலத்தைக் கண்ணால் பார்த்துக் கொண்டு நின்று விட்டுத் எதை தான் செய்யமுடியும்.

எத்தனை தத்தளிப்புகள், தவிப்புக்கள், இடிபாடுகள் எல்லாமே என் கண் முன்னால் நடந்தன. இதை எல்லாம் என்னால் எப்படிக் கூறுவது என்று கூடத் தெரியவில்லை. இந்தக் கடல் ஏன் இப்படிச் செய்தது. மரத்தில் இருந்து நான் இறங்கியதும் எனது வீட்டுக்குப் போக ஓடினேன் என்னால் போகவே முடியவில்லை சின்னாறு சோமியாறு இரண்டும் கடலுடன் சேர்ந்து உயரமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் தண்ணீர் வடிந்த உடன் வட்டுவாகலால் போய் என் வீட்டுக்குப் போனேன். பாதையில் என்னைக் கண்டவர்கள் சொன்னார்கள் என் மனைவி இறந்து விட்டாள். அவரை வைத்தியசாலைக்கு கொண்டு போய் விட்டார்கள் என்றார்கள். உடனே என் பிள்ளைகள் என்ன மாதிரி கண்டியளா? என்று கேட்டேன் அவர்கள் ஒருமாதிரி தப்பி விட்டார்கள் என்றார்கள். நான் ஏன் இனி வீட்டுக்குப் போவான் உடனே வைத்தியசாலைக்குப் போனேன் அங்கே கிடந்த பெரும் சடலக்குவியலுக் குள் என் மனைவியும் கண்மூடிக் கிடந்தாள்....

(தொடரும்)

# கடந்த வாரத்தில்...




**10.01.2005-16-01-2005**

## 10.

*.வட-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்திற்கு விஜயம்.

*. பிரிட்டனின் கடற்படைக் கப்பல் ஒன்று திருமலையை வந்தடைந்தது.

*.ஈரோஸ் அமைப்பின் தலைவர் சங்கர் ராஜி மரணம்.

*. தீவுப்பகுதி வீதிகள் புனரமைக்கப் படாமையைக் கண்டித்து மண்கும்பானில் மக்கள் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## 11.

*.சுனாமி அலையின் தாக்கத்தினால் உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் பாதிப் பிலிருந்துவிடுபட ஒருவருடமாவது தேவையாக இருக்கலாமென வைத்திய கலாநிதி எழுமதிகரிகாலன் கிளியில் அமைந்துள்ள சர்வதேச மனித உரிமைகள் செயலகத்தில் நடைபெற்ற உளவளம் சார் ஒன்று கூடலின் பின்னர் செய்தி யாளர்களிடம் தெரிவிப்பு.



உளவளம்சார் ஒன்றுகூடல்

*.இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபமாராவ் கடல் கொந்தளிப்பினால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட யாழ்.விஜயம்.

*.சர்வதேச பொலிசான இன்ரபோலின் பொதுச் செயலர் ரொனல் நோபெல் சிறிலங்கா விஜயம்.

*.அம்பாறை மாவட்ட நலன்புரி நிலையங்களை விட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழக தொண்டர்கள் உடனடியாக வெளியேற வேண்டுமென சிறிலங்கா அதிரடிப்படையினர் எச்சரிக்கை.

## 12.

*.கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர் ஜிம்கரியானிஸ் யாழ். விஜயம் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார்.

*.பெல்ஜியம் நாட்டு இராணுவத்தினர் இலங்கையை வந்தடைந்தனர்.

*.சிங்கப்பூர் கல்வியமைச்சர் தர்மன் சண்முகரத்னம் திருமலைக்கு விஜயம் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் அகதிகளைப் பார்வையிட்டார்.

*.புதுக்குடியிருப்பில் இடம் பெற்ற வீதி விபத்தில் ஒருவர் பலி.

*.சுனாமி அனர்த்தத்திற்காக சர்வதேச நாடுகளிடமிருந்து கிடைக்கும் உதவி நிதிகளைச் சுரண்டுவதில் அரசு ஆர்வம் காட்டுகிறதென ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கொழும் பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

*.அம்பாறையில் புலிகள்- படையினர் சந்திப்பு.

*.சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமார துங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு.

## 13.

*.அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரை உலக வங்கி சர்வதேச நாணயநிதியம் உள்ளிட்ட நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் சந்தித்தனர்.



நிதி நிறுவனபிரதிநிதிகளுடன்...

*.சம்பூரில் திருமலை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் சொர்ணம் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் டொன்புறூவ்ஹொவ்டே சந்திப்பு.



ஹொவ்டேயுடன் சந்திப்பு...

*.திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனை கட்டைப்பறிச்சான் பொலிசார் மறித்து அவரது பயணப் பொதி யைத் திறந்து காட்டும் படி வற்புறுத்தினர்.

*.ஆயுத தளபாட கொள்வனவுக்காக இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட தலைமையில் முப்படைகளையும் சேர்ந்த 11 சிரேஷ்ட அதிகாரிகள் அடங்கிய குழுவினர் ஈரானுக்கு விஜயம்.

*.தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதி நி[illegible]ம் -விசேடஅதிரடிப்படையினரும் அ[illegible]றையில் சந்திப்பு.

## 14.

*. அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரை கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஜிம் கரியானிஸ் சந்தித்தார். பின் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், கனேடிய அரசின் நிதியுதவி சிறிலங்காவிற்கும், வட-கிழக்கிற்கும் சரி சமமாக பகிர்ந்தளிக்கப் படுமெனத் தெரிவித்தார்.



கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்.

*. கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் தலைமைச் செயலகத் திற்கு விஜயம் செய்த கனேடிய பாராளு மன்ற உறுப்பினர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜியை சந்தித்தார்.



த.பு.க.தலைமைச் செயலகத்தில்

*. உலக உணவு நிறுவன அதிகாரிகள் வடமராட்சிக்கு விஜயம்.

*. கொழும்பில் இடம்பெற்ற இரு வேறு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் ஐவர் பலி.

## 15.

*. அரசியல் துறைப் பொறுப்பாளரை ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வை யிடுவதற்காக ஐ.நாவினால் நியமிக்கப்பட்ட சிறப்புப் பிரதிநிதியும் சந்தித்தனர்.



ஐ.நா அதிகாரிகளுடன்...

*. சுனாமியால் அழிவுற்ற முல்லை நகரை ஐ.நா சபையின்பிரதிநிதிகள் பார்வை யிட்டதுடன் தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசையை சந்தித்து முல்லைத்தீவின் நிலைப்பாடுகள் தொடர் பாகவும், அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களின் தற்போதைய நிலை தொடர் பாகவும், கலந்துரையாடினர்.




முல்லை நகரில்...

*. திருமலை பள்ளத்தோட்ட மக்கள் தமக்கான நிவாரண உதவிகளை உரிய முறையில் வழங்க வேண்டுமெனக் கோரி வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## 16.

*.. தமிழர் தாயகமெங்கும் கேணல். கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 12ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.



10 வேங்கைகள் நினைவாக...

*.. பாரிய சர்வதேச உதவிகள் அரசாங் கத்தால் தமிழ் மக்களுக்குப் பகிர்ந்தளிக் கப்படவில்லை என ஐ.நா.உலக உணவுத் திட்டப் பணிப்பாளருடனான சந்திப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.



உலக உணவுத்திட்டப் பணிப்பாளருடன்.

*. மன்னாரில் கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் நினைவு நிகழ்வைக் கொண்டாட முற்பட்டவேளை அதனைக் குழப்பும் நோக்கில் படையினர் அடாவடிச் செயலில் ஈடுபட்டனர்.

*. இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ் அம்பாறைக்கு விஜயம் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார்.

*.. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தாட்டோ சினோவை கொழும் பில் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் சர்வதேசத்தின் உதவிகள் சகல பகுதிகளுக்கும் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டுமென வலியுறுத்தினார்.

*.. ஐ.நா சிறப்புப் பிரதிநிதி வடமராட்சி கரையோரப் பகுதிகளைச் சென்று பார்வையிட்டார்.

*. புத்தூர் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் பலி.

*. கொரிய சர்வமத ஒத்துழைப்பு நிலை யத்தின் பிரதிநிதிகள் மூவர் யாழ். விஜயம்.


*. மட்டக்களப்பு கல்லடியில் இனந் தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி ஒருவர் பலி. ★

# ரெக் கணினி கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் ரெக் கணினி மையத்தில் கணினி கற்கை நெறியினை நிறைவு செய்த மாணவர்களிற்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. பயிற்சி நிலைய ஆசிரியை க.பொன்மணி தலைமையில் நடைபெற்ற இச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் மங்கல விளக்கினை பயிற்சி நிலைய பொறுப்பாளர் சாரு மதியும், நிர்வாக அலுவலர் திருமதி சரவணபவனும் ஏற்றி வைத்தனர். கருத்துரைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலனும், சிறப்புரையினை கிளி/ வட்டக்கச்சி மகாவித்தியாலய உப அதிபர் திருமதி. பொன்னுத்துரையும் நிகழ்த்தினர். கற்கை நெறியினை நிறைவு செய்த 50 மாணவர்களிற்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் ஏற்கனவே இக்கணினி மையத்தில் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுள்ளமையும்,தற்போதும் புதிய கணினி வகுப்புகள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (15,12)





கொழும்பிலிருந்து யாழ். நோக்கி பயணிகளுடன் பயணித்த ஹையெஸ் வாகனம் வீதியை விட்டு விலகி தடம்புரண்டது. மேற்படி சம்பவம் நேற்று பகல் 10.00 மணியள வில் முறிகண்டிப்பகுதியில் இடம்பெற்றது. ஏ-9 வீதியூடாக பயணித்தவேளையில் முறிகண்டிப்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்றினை விலத்திச்செல்ல எத்தனித்தபொழுது சாரதியின் கட்டுப்பாட்டினை மீறி ஹையெஸ் வாகனம் ஏ-9 வீதியை விட்டு விலகி பள்ளத்தில் தடம்புரண்டதன் காரணமாக வாகனத்தில் பயணித்த 12 பேர்களில் எண்மர் காயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பெற்று சிகிச்சைபெற்று வருகின்றனர். (சோதி)

# சுனாமியால் பாதிப்புற்றுள்ள தமிழர்களுக்கு உதவிபுரியும்
# முயற்சிகளில் கனேடிய எதிர்க்கட்சித் தலைவரும் பங்கேற்பு

கனேடிய எதிர்க்கட்சித் தலைவரும், பழமைவாதக் கட்சியின் தலைவருமான மாண்பு மிகு ஸ்ரீபன் ஹார்பர் நேற்றுமுன்தினம் ரொரன்ரோவில் இடம் பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தப் பொருள் சேகரிப்பிலும், இப்பேரனர்த்தம் தொடர்பான ஊட கவியலாளர் மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

ரொரன்ரோ புனித ஆரோக்கிய அன்னை தமிழ் கத்தோலிக்க பங்கும் ரொரன்ரோ தமிழ்க் கத்தோலிக்க சமூகமும் இணைந்து மேற்கொண்டுவரும் பேரலையனர்த்த நிவாரணப் பொருட்கள் சேகரிப்பின் ஒரு அங்கமாக அப் பொருட்களை பெட்டியிலடைத்தல் மற்றும் கொள்கலனில் ஏற்றல் ஆகிய செயற்பாடுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போதே எதிர்க்கட்சித் தலைவரும் கலந்து கொண்டார். 925 Warden Avenue இல் மதியம் 2.00 மணிக்கு சமுகம் தந்த கனடா பாராளுமன்றின் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சித் தலைவரும், கனடா பழமைவாதக் கட்சியின் தலைவருமான ஸ்ரீபன் ஹார்பர் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த தன்னார்வத் தொண்டர்கள், நலன்விரும்பிகள், நிர்வாக அங்கத்தவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களையும் சந்தித்து கலந்துரையாடினார். ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ள பொருட்களை தாயகத்திற்கு ஏற்றிச் செல்வதற்கு 10 பாரிய கொள்கலன்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆரோக்கிய அன்னை தமிழ் கத்தோலிக்க பங்கின் இந் நிவாரண சேகரிப்பிற்கு கனடாவிலுள்ள இந்து முன்னணி மற்றும் சீக்கிய ஆலயம், யூதர்களின் பிரபல்ய தொண்டு நிறுவனமான பினே பேர்த் கனடா ஆகியன உட்பட பல்வேறு அமைப்புக்கள் உதவி புரிந்துள்ளன.

இதன் பிரதான ஒருங்கமைப்பாளர்களில் ஒருவரான சில்வெஸ்டர் கருத்துக் கூறுகையில், நேற்று 3 கொள்கலன்கள் களஞ்சியசாலை வளாகத்திலிருந்து மொன்றியல் கப்பற்தளம் நோக்கி நேரடியாகப் புறப்படுவதாகவும், ஏனையவை விரைவில் அனுப்பப்படும் என்றும் குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்துக் கூறுகையில், மொன்றியலிலிருந்து கப்பல் மூலம் கொழும்பு செல்லும் இக்கொள் கலன்கள், அங்கிருந்து வெளியேற்றப்பட்டு இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும், குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு, பாதிப்படைந்த மக்களுக்கு விநியோகிக் ப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் தலைமை ஒருங்கிணைப்பாளரான யூட் அலோசியஸ் கருத்துக் கூறுகையில்,

புனித ஆரோக்கிய அன்னை தமிழ் பங்கு மக்களும் நலன் விரும்பிகளும் தாராளமாக வழங்கிய நிதி அன்பளிப்பு மூலம் ஏற்கனவே 72 ஆயிரத்திற்கும் அதிகமான கனேடிய டொலர்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும், ஒரு இலட்சத்தை எட்டுவதே தங்களது நோக்கம் என்றும் குறிப்பிட்டார். அனுப்பப்படும் கொள்கலன்களுக்கான செலவைப் பொறுக்க நிறுவனங்கள் முன்வந்தால் உதவியாக இருக்கும் என்றும் அவர் நிருபர்களைக் கேட்டுக் கொண்டார். களஞ்சியசாலையில் செலவழித்த 45 நிமிடங்களில், ஸ்ரீவன் ஹார்பர், பொருட்களை கொள்கலனில் ஏற்றுதல், பொருட்களைத் தெரிதல், தன்னார்வத் தொண்டர்களை உற்சாகப்படுத்துதல், நிர்வாக உறுப்பினர்களுக்கு வாழ்த்துக் களைத் தெரிவித்தல் என பல்வேறு செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். அங்கிருந்து அருகிலுள்ள சென்ரனியல் கல்லூரி பாடசாலை அறையொன்றில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஹார்பர், அங்கு நிருபர்களின் பலவித கேள்விகளுக்கும் பதிலளித்தார். இலங்கையில், கியூடெக், திருமறைக் கலாமன்றம், லயன்ஸ் கிளப், றோட்டரி கிளப் ஆகியன உட்பட வடக்கு கிழக்கு கத்தோலிக்க ஆயர்களும் ஏனைய சமூக நிறுவனங்களும் இந்நிவாரணப் பொருட்களைப்பெற்று மக்களுக்கு விநியோகிக்கவுள்ளன.

## விலை சீராக்கப்படும்

மாவின் விலையும், பாணின் விலையும் கட்டுப்பாட்டு விலைக்கு இரண்டொரு கிழமைகளில் கொண்டு வரப்படுமென சிறிலங்கா வாணிப அமைச்சர் பெர்னா ண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

# சுனாமியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் ஏராளம் இருக்கிறது
## ஐ.நா.பொதுச் செயலர் கொபிஅனான்

சுனாமி பேரலையிலிருந்து உலகம் கற்றுக்கொள்ள வேண்டிய வியங்கள் ஏராளமாக இருக்கின்றதென்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

அதிகதொகையை முதலீடு செய்வதன் மூலம் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படுகின்ற உயிர்ச்சேதங்களையும், பொருட்சேதங்களையும் தவிர்க்க முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஜப்பனிய நகரில் நடைபெறும் 5 நாள் மநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பூகம்பம் பேரலைகள் தாக்குவதற்கு முன்னர் செய்திகளுக்காக பணத்தைச் செலவழித்தி ருந்தால் அழிவைத் தவிர்த்திருக்க முடியுமென்பது எமது கருத்தாகும் எனவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்கான உதவிப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்
## புலிகளுடனான சந்திப்பில் படை அதிகாரிகள் இணக்கம்

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறையினருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரின் மட்டக்களப்பு மாவட்ட உயர்மட்ட அதிகாரிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் மாவட்ட அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இம் மாவட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிப் போராளிகளும், சில தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளும் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் குறித்து குறிப்பாக இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்கும் இந்தப் பணி எவ்வித தடங்கலுமின்றி நடைபெறுவதற்கு அரசாங்க பாதுகாப்புப் படையினர் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளினால் வலியுறுத்தப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட இராணுவ அதிகாரிகள் இக்கால கட்டத்தில் விடுதலைப் புலிகளின் இந்தப் பணி எவ்வித தடையுமின்றி தொடர்வதற்கு தங்களாலான பூரண ஒத்துழைப்பை வழங்குவதோடு, இது தொடர்பான பணிப்புரை சகல அதிகாரிகளுக்கும் விடுக்கப்படும் என்றும் உறுதியளித்தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டு - அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளரும், ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணப் பணிக்குழுவின் மாவட்ட இணைப் பாளருமான தயா மோகன், புளியந்தீவு கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர் அன்புமாறன், பட்டிருப்பு கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர் செல்வன், குடும்பிமலைக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் புகழன், மாவட்ட அரசியல்துறை செயலக இணைப் பாளர் மனோஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர். சிறிலங்கா இராணுவத் தரப்பில் 233 ஆவது படைப் பிரிவு கட்டளை அதிகாரி கேணல் எல்.ஆர்.அமரதுங்க, 552 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் எல்.வலகம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# முறையான விசாரணை இல்லை

கடல் அனர்த்தத்தினால் அழிவிற்குள்ளான யால தேசிய சரணாலயத்தில் உயிரிழந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகள் தொடர்பாக முறையான விசாரணை இடம் பெறவில்லையென பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளியன்று யாலதேசிய சரணாலயத்திற்கு சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சென்றிருந்த போதே இதனைச் சுட்டிக்காட்டியுள்ளதுடன் இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பாக பொலிசார் செயற்படவேண்டிய முறைபற்றி பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விளக்கிக்கூறியுள்ளார்.

**வீடியோ மிக்சிங் பிரியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

இந்தியூமேலைத்தேய உருவாக்கத்தில் அமைந்த
* Video Effects (Pinnacle, canopus)
* Video Background DVD

**விற்பனைக்கு**

இவை அனைத்தும் அண்மைய வெளியீடுகள் ஆகும்.
தொடர்புகளுக்கு 0777917610 (5361)

## கூட்டுறவுப்பணியாளர் தராதரப் பத்திர (சாதாரண) தர
## பயிற்சிநெறி 2005 விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபையால் மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கீழ்வரும் தகைமைக்கமைய வெளிவாரிப் பயிற்சியாளர்களிடம் இருந்தும் கோரப்படுகின்றன.

01. கல்வித்தகைமை :- க.பொ.த.(சாதாரண) தரப் பரீட்சையில் தமிழ், கணிதம், உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் கூடிய இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில 06 பாடங்களில் சித்தி பெற்றவர்.

அல்லது

க.பொ.த.(உயர்) தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள்.

02. பயிற்சிக்காலம் :- 06 மாதங்கள் (சனவரி - யூன்)

03. கணினியும் அடிப்படைக் கல்வியாகக் கற்பிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களை புதுக்குடியிருப்பில் இயங்கும் மாவட்ட கூட்டுறவுச் சபையில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 31.01.2005 இற்கு முன்னர் மாவட்ட செயலாளர், மாவட்ட கூட்டுறவுச் சபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மாவட்டச் செயலாளர்,
மா.கூ.சபை, முல்லைத்தீவு.

(சி1761)

**LONDON TR Tech நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் நடாத்தும் தகவல் தொழில் தொழில்நுட்பம் [IT] ஆங்கில டிப்ளோமா [Diploma in English] ஆகிய பயிற்சி நெறிகளுக்கு நடைபெற்ற தெரிவுப் பரீட்சை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் மாணவர் விபரம் வருமாறு.**

## IT

1. எம். சுனேத்தா
2. ரி. சிவரூபன்
3. எஸ். சிவசுந்தர்.
4. ரி. சதாசிவபதி.
5. என். கனேசலிங்கம்
6. கே. சசிகலா
7. பி. வளர்மதி
8. எஸ். ஜீவேந்திரன்
9. கே. அனுசா
10. ரி. தவராஜசேகரம்
11. ஜி. சித்திரூபா
12. என். பாலசந்தர்
13. எஸ். சசிகலா
14. ரி. கலைவாணி
15. கே. துஸ்யந்தன்
16. ரி. ஸ்ரீபன் றஞ்சித்
17. கே. ஜெயானி
18. என். சுகந்தினி
19. ஜெ. திவ்யராணி
20. என். ஐங்கரன்
21. எஸ். சிவசத்திகுமார்
22. எஸ். திவாகரன்
23. எஸ். அகிலா
24. என். லோஜினி
25. என். தாரணி
26. எல். டினேஸ்
27. எம். டயானி
28. வி. குமுதினி
29. எஸ். துர்க்கேஸ்வரன்
30. வி. சண்முகப்பிரியன்
31. ஆர். பவானி
32. கே. குகரட்ணம்
33. கே. குகதாஸ்
34. எம். விஜயதர்சினி
35. எம். ராசமணி

## Diploma in English

1. எஸ். சிவசக்திகுமார்
2. பி. பிரமிரா
3. என். நிரோஜன்
4. என். ராஜசுதன்
5. என். சந்திரமோகன்
6. கே. குகரட்ணம்
7. பி. கலைவாணி
8. பி. திருமாறன்
9. ஈ. யோகேஸ்வரன்
10. ஜி. தட்சாயினி
11. எஸ். தர்சினி
12. கே. யமுனா
13. ஏ. விஜயகுமார்
14. ஆர். பகீரதன்
15. ரி. உதயகுமாரி
16. எஸ். அகிலேஸ்வரி
17. ஜி. சோபனா
18. கே. நகுலேஸ்வரி
19. அன்ரனி றிச்சாட்
20. ரி. யமுத்திரா
21. ஏ. விகாஜினி
22. கே. சிவானந்தி
23. எல். நித்தியதர்சினி
24. வி. அனந்தினி
25. ஆர். லிங்கராஜன்
26. எஸ். லோகேஸ்வரன்
27. ரி. லோகேஸ்வரி
28. ஜே. சிவநந்தகுமார்
29. எஸ். குமுதினி
30. ஜி. சோபினி
31. எம். வளர்மதி
32. ஆர். விஜயலக்சுமி
33. பி. சேரன்
34. ஏ. சியந்திகாதேவி
35. கே. திசைநாயகம்
36. எஸ். சிவசுதர்சன்
37. வி. ஜெகதீஸ்வரி
38. எம். எழிலரசி
39. ரி. மதிவாணி
40. பி. சசிரதன்

*IT* பயிற்சிநெறிக்குரியவர்களை 22/01/2005 காலை 11.00 மணிக்கு சமுகந்தருமாறும் *Diploma in English* மாணவர்களை 2.00 மணிக்கும் சமுகந்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

✱ குறிப்பு:- தெரிவு செய்யப்படாதவர்களது விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு காலப்போக்கில் சந்தர்ப்பம் அவர்களுக்கும் வழங்கப்படும்

(5566)

# ஆந்திர அரசுடன் இனியும் பேசமாட்டோம்

# ஆயுதம் ஏந்திப் போராடப் போகிறோம்

## நக்சலைட் தீவிரவாதிகள் அறிவிப்பு

(புதுடில்லி)

ஆந்திர மாநில அரசு எம்முடன் நயவஞ்சகமாக செயற்பட்டு எமது வீரர்கள் மீது அதிரடித்தாக்குதல் களை நடத்தி வருகிறது. இதனால் நாங்கள் அதனுடன் இனிப் பேச்சு வார்த்தை நடத்தத் தயாரில்லை. தொடர்ந்து ஆயுதம் ஏந்திப் போரடப் போகிறோம் என ஆந்திர மாநில அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி வந்த நக்சலைட் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

ஆந்திர மாநிலத்தில் நக்ச லைட்களுக்கும், மாநில அரசுக் கும் இடையே அமைதிப் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. ஐதராபாத்தில் நடந்த முதல் கட் டப் பேச்சுவார்த்தையில் எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக பொலிசார் நடத்திய அதிரடித் தாக்குதலில் 10 இற்கும் மேற்பட்ட நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது நக்சலைட்டுகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து மாவோயிஸ்ட் நக்சலைட் இயக்கத் தலைவர் ராமகிருஷ்ணா நிருபர்களிடம் கூறியதாவது:-

நாங்கள் அரசுடன் முதற் கட்டப் பேச்சுவார்த்தை நடத்திய போது மக்கள் பலர் எங்களிடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.

இதன் மூலம் மக்களிடம் எங்க ளது செல்வாக்கு அதிகரித்ததால் அரசுக்குப் பயம் வந்து விட்டது. மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி னால் நக்சலைட்டுகளின் செல் வாக்கு மேலும் உயர்ந்து விடுமோ என்று அஞ்சுகிறது.

இதைத் தொடர்ந்தே கடந்த சில நாட்களாக எங்கள் மீது பொலிசார் அதிரடித் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். எங்களை எப்படியாவது ஒழித்துக் கட்டி விட வேண்டும் என்பதில் தான் பொலிசார் குறியாக உள்ளனர்.

பேச்சுவார்த்தை என்ற பெய ரில் அரசு நக்சலைட்டுக்களை நயவஞ்சகமாக ஏமாற்றி சதி வேலைகளில் ஈடுபட்டு வருகிறது.

இதனால் நாங்கள் அரசுடன் இனிப் பேச்சுவார்த்தை நடத்த தயாரில்லை. இனி தொடர்ந்து அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடுவோம் இவ்வாறு அவர் கூறினார்.

நக்சலைட்டுகளுடனான பேச்சு வார்த்தை பற்றி உள்துறை மந்திரி சானாரெட்டி கூறியதாவது;

கிராம மக்களை மிரட்டி பண வசூல் செய்த நக்சலைட்டுகள் மீது பொலிசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மாநிலத்தில் சட்டம்- ஒழுங்கைக் காக்க வேண்டியது பொலிசாரின் கடமை அதைத்தான் செய்கிறார்கள். நக்ச லைட்டுக்கள் ஆயுங்களைக் கீழே போட்டு விட்டு வந்தால் அரசு அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த தயாராகவே உள்ளது என்றார்.



உ.பி.மாநிலம் சித்திரகூட் பகுதியில் காங்கிரஸ் கட்சித் தலைவர் களின் இரண்டு நாள் கூட்டம் மற்றும் பயிலரங்கு நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட காங்கிரஸ் எம்.பி.ராகுல் ராஜ்ய சபா உறுப்பினர் சஞ்சய்சிங்குடன் கை குலுக்கிறார்.

# நேபாளத்தில் இந்.தூதரகத்தில் கடமையாற்றிய பாதுகாவலர் மூவர் துப்பாக்கிச் சூட்டில் பலி

(காத்மாண்டு)

நேபாளத் தலைநகரிலுள்ள இந்திய தூதரகத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த இந்திய காவல் உத்தியோகத்தர்கள் 3 பேர் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகியுள்ளனர் இச்சம்பவத்தில் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இது எதிர் பாராதவிதமாக இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகமென்று அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.இந்திய அரசாங்கம் நேபாளத்தி லுள்ள தூதரகத்தில் ஆயுதம் தாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்தியுள்ளது. நேபாள இராணுவத்திற்கு கூடுதலான தளபாடங் களை வழங்கும் நாடு இந்தியா என்பது குறிப்பிடத் தக்கதாகும்.நேபாள இராணுவம் கம்யூனிஸ்ட் ஆட் சியை ஸ்தாபிக்கப்போராடும் மாவோ கிளர்ச்சியாளர் களை அடக்க முயல்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்திய வாக்குச் சாவடிகளில் புகைப்படமெடுக்க தடைவிதித்து தேர்தல் ஆணைக்குழு அறிவித்தல்

(புதுடில்லி)

வாக்குச்சாவடிகளில் மக்கள் வாக்களிப்பதை படம் எடுக்கக் கூடாது என்று தேர்தல் ஆணைக் குழு புதிய உத்தரவு பிறப்பித்துள் ளது. மராட்டிய மாநிலம் நாக்பூர் தெற்கு சட்டசபைத் தொகுதியில் வரும் 24ஆம் திகதி இடைத் தேர்தல் நடக்க இருக்கிறது. இந்த நிலையில் நாக்பூர் மாவட்ட கலெக்டரும் தேர்தல் அதிகாரியு மான லோகேஷ் சந்திரா கடந்த ஞாயிற்றுக்கிழமை பேட்டி அளித் தார் அப்போது அவர் கூறிய தாவது;

இது நாள் வரை தேர்தலின் போது பொதுமக்கள் வாக்களிக் கும் போது பத்திரிகையாளர்கள் புகைப்படம் வீடியோப் படம் எடுக்க அனுமதிக்கப்பட்டது. ஆனால் இனிமேல் அப்படிப் புகைப்படம் வீடியோ படம் எடுக்க முடியாது வாக்குச் சாவடிகளில் புகைப்படம் எடுப்பதைத் தடுக்க கடந்த 7ஆம் திகதி தலைமைத் தேர்தல் ஆணைக்குழு புதிய விதிமுறை வகுத்துள்ளது. அதன்படி வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்களிக்கும் இடங்களில் பத்திரிகையாளர்கள் படம் பிடிக்க முழுத் தடை விதிக்கப்படுகிறது. இந்தப் புதிய உத்தரவு அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுக் கும் அனுப்பப்பட்டுள்ளது.

இனிமேல் மக்களவைத் தேர் தல், மாநிலங்களவைத் தேர்தல், சட்டமன்ற தேர்தல், சட்ட மேலவைத் தேர்தல், சனாதிபதித் தேர்தல் ,துணைச் சனாதிபதித் தேர்தல் உட்பட எந்தத் தேர்தலிலும் வாக்குச் சாவடியிலோ வாக்களிக்கும் இடங்களில் புகைப்படமோ வீடியோ படமோ எடுக்க முடியாது உரிய அடையாள அட்டை வைத்திருக்கும் பத்திரிகை புகைப்படக்காரர்கள் கூட வாக்குச் சாவடிகளில் அனுமதிக் கப்படமாட்டார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்த வாக்குச் சாவடி யில் உள்ள தேர்தல் அதிகாரிக்கு அதிகாரமுள்ளது. அதுபோல் வாக்குச் சாவடியில் இருந்து 100 மீற்றர் தூரம் வரை செல் போன் களைப் பயன்படுத்தவும் அனுமதிக் கப்பட மாட்டாது இவ்வாறு அவர் கூறினார்.

# சங்கரமடத்தை நிர்வகிக்க வங்கியில் பணம் எடுக்க அனுமதி

### உயர்நீதிமன்று அறிவிப்பு

(சென்னை)

காஞ்சி சங்கர மடத்தின் சார்பில் வங்கிகளில் தொடங்கப்பட்டுள்ள கணக்கை பொலிசார் முடக்கி வைத்தனர்.

இதை நீக்க வலியுறுத்தி காஞ்சி மட சார்பில் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நீதிபதி சிவ சுப்பிரமணியன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. குறிப்பிட்ட வங்கியில் இருந்து ஒரு கணக்கில் பணம் எடுக்க உயர் நீதிமன்று அனுமதி அளித்தது. அந்த வங்கி பெயர் மற்றும் எண்ணை நீதிமன்றில் தெரிவிக்க வேண்டும் அதன் பிறகு செயற்படும் வங்கியின் கணக்கு எண்ணை அதிகார பூர்வமாக அறிவிப்பதாக நீதிபதி அறிவித்தார்.

# 550 பொருட்களுக்கு மதிப்பு கூடுதல் வரி

### - ப.சிதம்பரம் அறிவிப்பு

(புதுடில்லி)

மருந்துக்கு 4 சதவீதம், தங்கம்-வெள்ளிக்கு 1 சதவீதம் உட்பட 550 பொருட்களுக்கு மதிப்புக் கூடுதல் வரி விதிக்கப் பட்டுள்ளதாக நிதி அமைச்சர் ப.சிதம்பரம் அறிவித்தார்.

இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் வருகிற ஏப்ரல் மாதம் முதல் விற்பனை வரிக்குப் பதிலாக ஒரே மாதிரியான மதிப்பு கூடுதல் வரி விதிப்பு முறை அமுற படுத்தப்படவுள்ளது அனைத்து மாநில அரசுகளும் இதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளன.

எந்தெந்த பொருளுக்கு எவ்வ ளவு மதிப்புக் கூடுதல் வரி விதிக் கப்படவுள்ளது என்ற விவரத்தை (வெள்ளை அறிக்கை மத்திய நிதி மந்திரி ப.சிதம்பரம் நேற்று வெளியிட்ட அந்த அறிக்கையில் 18 பக்கங்களில் இருந்தது.

## காணவில்லை



நடேசன் நெடுஞ்சேரன் இராமநாதபுரம் மகாவித்தி யாலய க.போ.த.உ.த மாணவன். இவர் கடந்த 2005.01.10 அன்று காணாமல் சென்றுள்ளார். வயது-22 இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் ஈழநாதத் திற்குத் தொடர்பு கொள்ளவும்

தகவல்:- தாய் ந.புஸ்பராணி
தொண்டமாநகர், கிளிநொச்சி. (5569)

## ஊர்தி உரிமையாளர்கள் கவனத்திற்கு

முள்ளியவளை, நெடுங்கேணி, கனகராயன்குளம், முழங் காவில், விடத்தல்தீவு, மடு, மருதங்கேணி, பளை ஆகிய போக்குவரத்துக்கண்காணிப்புப் பிரிவு பிரதேச செயலகங் களில் பதிவும், 2005 ஆம் ஆண்டு வரியட்டைக்கும் விண்ணப் பித்தவர்கள் 19.01.2005 தொடக்கம் 31.01.2005 வரையான காலப்பகு திக்குள் ஒப்படைத்த தமிழீழ ஆவணங்களைப் பெற்றுக் கொள் ளவும். முல்லைத்தீவு பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்த வர்கள் முள்ளியவளை பிரதேச செயலகத்தில் ஆவணங் களைப் பெற்றுக் கொள்ளவும், இக்காலப்பகுதிக்குள் ஆவ ணங்களை மீளப் பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் 15. 02.2005 முதல் கீழ் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு போக்கு வரத்துக் கண்காணிப்புப்பிரிவினர் அறியத் தருகின்றனர்.

மேலாளர்,
போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.

(சி-11082)


# ரியல் மாட்ரிட்டில் இருந்து விலக நேரிட்டால் மஞ்செஸ்டர் யுனைடட்டிலேயே இணைவேன்

-டேவிட் பெக்காம்

இங்கிலாந்து கால்பந்து அணித் தலைவர் டேவிட் பெக்காம் தான் எப்போதாவது றியல் மட்றிட் கழகத்திலிருந்து விலக நேரிட்டால் மஞ்செஸ்டர் யுனைடட் கழகத்தில் சேர்வதாகத் தெரிவித்துள்ளார். அவ்வணி தான் தன்னை வளர்த்துவிட்ட கழகமென அவர் குறிப்பிடுகின்றார்.

எவ்வாறெனினும் ரியல் மாட்ரிட் கழகத்தில் தான் மகிழ்ச் சியுடன் இருப்பதாக வலியுறுத்திய அவர் ஸ்பெயினில் இன்னும் சாதிக்க வேண்டும் என்றார். தற்போது இங்கு ஒன்றரை வருடமாக இருந்தாலும் கடந்த சில மாதங்களாக கால்பந்தில் எவ்வித திறனையும் வெளிக்காட்ட முடியாது விட்டது என கூறியதுடன் தான் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் ஸ்பெயின் லீக்,சம்பியன் லீக் தொடர்களில் விருது பெற வேண்டும் என்றார்.

இதற்கிடையில் மஞ்செஸ்ரர் சிற்றியின் வளர்ந்துவரும் வீரரான ஷோன் றைட் பிலிப்ஸ்டன் போட்டியிட்டு சர்வதேசத்தில் இடம்பிடிக்கவேண்டியுள்ளதாகக் கூறுகிறார். அவர் எனது முன்னேற்றத்தில் அக்கறை கொண்டிருப்பினும் அவர் முன்னேறுவதைப் பார்க்க தானும் விரும்புவதாக பெக்காம் தெரிவித்துள்ளார்.



இதனால் நான் மனம் வருந்துவதாக மக்கள் நினைக்கின்றனர் என்றும் தான் அதற்கு வருத்தப்படவில்லை இங்கிலாந்து அணி எப்போதும் பெரு மைப்பட வேண்டிய அணியாக இருப்பதாகவும் பெக்காம் கூறுகிறார்.



*மாட்ரிடில் நடந்த ஸ்பானிஷ் லீக் கால்பந்து போட்டியில், ஜரகோசா அணி வீரர்களை ஏமாற்றி கோல் அடிக்கிறார். ரியல் மாட்ரிட் அணி வீரர் மைக்கேல் ஓவன் (நடுவில்) இந்தப் போட்டியில் ரியல் மாட்ரிட் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.*

## பங்களாதேஷின் முதல் டெஸ்ட் வெற்றி சரியான நேரத்தில் கிடைத்த பரிசு



ரவிசாஸ்திரி

பல தரப்புக்களில் இருந்தும் வந்த கடும் விமர்சனங்களுக்கு அழுத்தமான முற்றுப் புள்ளி வைத்திருக்கிறது. பங்களாதேஷ் கிரிக்கெட் அணி. 'டெஸ்ட் அந்தஸ்து கொடுத் ததே தவறு' என்று பலரும் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவிக்க... சரியான நேரத்தில் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்திருக்கிறது என இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ரவிசாஸ்திரி தெரிவித்துள்ளார்.

அனுபவமற்ற ஒரு புதிய அணிக்கு, டெஸ்ட் போட்டிகளில் முதல் வெற்றி என்பது சாதாரண விடயமல்ல. மிகப்பெரிய கொண்டாட்டம். பங்களாதேஷ் அணியின் இளம்வீரர்கள் முகத்தில் அந்த மகிழ்ச்சியைக் காணமுடிந்தது. இந்த வெற்றியைத் தாமதம் என்று நான் நினைக்கவில்லை.

காரணம்,டெஸ்ட் அந்தஸ்து கிடைத்த பல அணிகள், முதல் வெற்றிக்காக நிறையப் போராடியிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், சில அணிகளை விட சற்று முன்னதாகவே முதல் வெற்றியை பெற்றுவிட்டது பங்களாதேஷ், 'இரண்டாம் நிலை' சிம்பாப்வே அணிக்கு எதிராகக் கிடைத்ததுதானே இது என்று பங்களாதேஷின் வெற்றியை யாரும் சுலபமாக ஒதுக்கித்தள்ளிவிடமுடியாது. காரணம், மிகச் சரியான திசையில்அந்த அணி சென்று கொண்டிருக்கிறது. கடந்த மாதம் ஒருநாள் போட்டியல் இந்தியாவை வென்றபோதே இந்த வார்த்தைகளை நான் சொல்லியது நினைவிருக்கலாம். இளம் திறமைசாலிகள் அங்கு நிறையப் பேர்இருக்கிறனர். பங்களாதேஷ் கிரிக்கெட் நிர்வாகம் இப்போது செய்யவேண்டிய முக்கியமான ஒரு வேலை என்ன. இளம் திறமைசாலிகளைக் கண்டுபிடித்து, அவர்களுக்குப் போதுமான வாய்ப்புப் பயிற்சி அளிப்பது மட்டுமே. அப்படிச் செய்யும் பட்சத்தில் அந்த அணியின் எதிர்காலம் மிகப் பிரகாசமாக இருக்கும்.


# டாக்கா டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி நிறைவு


# பங்களாதேஷ் தொடர் வெற்றியைப் பதிவாக்கியது

பங்களாதேஷ் கிரிக்கெட்அணி டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் தனது முதலாவது தொடர் வெற்றியை நேற்றுப் பதிவு செய்துகொண்டது.

பங்களாதேஷின் டாக்கா நகரில் நடைபெற்று வந்த சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் இறுதிநாளான நேற்று போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்துக்







கொண்ட பங்களாதேஷ் இத்தொடருக்கான வெற் றியை பதிவு செய்தது.

சிம்பாப்வே நிர்ணயித்த வெற்றி இலக்கான 374 ஓட்டங்களை நோக்கி துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் போட்டியின் இறுதி நாளான நேற்று போட்டி நிறைவடையும் போது 5 விக்கெட்டுக்களை இழந்து 285 ஓட்டங்களை பெற்று போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொண்டது.

இதன் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது போட்டியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் தொடரைக் கைப்பற்றியது.

துடுப்பாட்டத்தில் நபீஸ் இக்பால் தனது கன்னிச் சதத்தைப் பெற்றதுடன் 121 ஓட்டங்களைக் குவித்தார். இவரைவிட ராஜன் சாலே ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும் ஜாவிட் ஓமர் 43 ஓட்டங்களையும், காலித் மசூட் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பன்னியங்கார 3 விக்கெட்டுக்களையும், கிரேமர் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக முதல் இனிங்சில் ஆட்டமிழக்காது 85 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் 153 ஓட்டங்களையும் பெற்று பங்களாதேஷ்க்கு சவால்மிகு ஓட்டத்தை நிர்ணயித்த சிம்பாப்வே அணித் தலைவர் தட்டண்டாதைபு ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

போட்டித் தொடர் நாயகனாக பங்களாதேஷ் அணியின் வெற்றியில் பெரும் பங்கு



வகித்த இளம் சுழல்பந்து வீச்சாளர் இனாமுல் ஹக் தெரிவானார்.

# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் றொடிக், மிஸ்கினா வெற்றிபெற்றனர்

கிராண்ட்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடை பெற்று வருகிறது. உலகின் 3ஆம் நிலை வீராங்கனையான அனஸ்டசியா மிஸ்கினா (ரஷ்யா) தொடக்க சுற்றில் செக்குடியரசை சேர்ந்த கெவிட்டாவை எதிர்கொண்டார்.

அனஸ்டசியா 6-1,6-4 என்ற நேர் செட் கணக்கில் வென்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

ஏனைய ஆட்டங்களில் 10ஆம் நிலை வீராங்கனையான அலிசியா மோளிக் (அவுஸ்திரேலியா),ஜெலினா. (சுலோவாக்கியா), டேனிலா (சுலோவாக்கியா), கரோலினா (குரோஷியா) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

உலகின் இரண்டாம் நிலை வீரரான ஆண்டிரொடிக் அமெரிக்கா,தொடக்க சுற்றில் ஜார்ஜியாவை சேர்ந்த லபோடாசாவை எதிர் கொண்டார். இதில் ரொடிக் 7-5,6-2, 6-1 என்ற நேர் செட்கணக்கில் வெற்றி பெற்றார்.



மற்ற ஆட்டங்களில் குயில்லார்மோ கோரியா. கனாஸ் (ஆர்ஜென்டினா) பெர்னாண்டோ கொனஸ் (சிலி) ஆகியோர் வென்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

இங்கிலாந்தை சேர்ந்த ருடெஸ்கி2-6, 6-4, 6-0,7-5 என்ற செட் கணக்கில் சுவீடனை சேர்ந்த ஜோனஸ் ஜோர்க்மேனை தோற்கடித்தார்.


# இங்கிலாந்தின் வெற்றிக்கு வழிசமைத்த ஹோகாட்டுக்கு சிறப்பு பாராட்டுக்கள்

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுடனான 4 ஆவது டெஸ்ட் போட்டியை வென்றதற்கு அவ்வணியின் மத்யூ ஹோகாட்டை தென்னாபிரிக்க பயிற்றுவிப்பாளர் ரேஜெனிங்க்ஸ் பாராட்டியுள்ளார். ஹோகாட்இப்போட்டியில் 2 ஆவது இனிங்சில் 7 விக்கெட்டுக்களை வீழ்த்தி வெற்றிக்கு வழிசமைத்தார்.



ஜெனிங்ஸ் மேலும் தெரிவிக்கும்போது, ஹோகாட் பந்துவீசும் போது சரியான இலக்கு நோக்கியும் ஆவர்வத்துடனும் பலத்துடனும் செயற்படுவதாக கூறினார். ஹோகாட் 50 ஓவர்கள் பந்து வீசியுள்ளார்.

மார்க்புச்சர், அவரைப்பற்றி குறிப்பிடும்போது அவர் புகழ் பெற்ற சிறந்த வீரர் என்றார். அவர் பங்கேற்ற அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும் கடுமையாக உழைத்திருப் பதை அவதானிக்கலாம். ஒரு போட்டியில் ஆட்டநாயகனாக அறிவிக்கப்படும் ஒருவர் உயர்வடைவதற்கு ஏதுவாக காலம் என்றும் புச்சர் பாராட்டுத் தெரிவித்துள்ளார். அவா 205 ஓட்டங்கள் கொடுத்து12 விக்கெட்டுக்களைப் பெற்றிருப்பது அவரது திறமையாகும்.



## சிந்தனைக்கு

சுதந்திரத்தை வென்றெடுக்காது;போனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும்;தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழவேண்டும்;பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும; படிப்படியாக அழிந்துபோக வேண்டும்.ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத்தவிர எமக்கு வேறுவழி எதுவுமில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 19-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23ela @ yahoo .com

## இது ஒன்றும் எதிர்பாராததல்ல

சுனாமியின் தாக்கத்தினால் ஏற்பட்ட பேரழிவில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கெனப் பாரிய புனர்நிர்மாணத் திட்டம் ஒன்றைச் சனாதிபதி சந்திரிகா நேற்று முன்தினம் அறிவிப்புச் செய்துள்ளார். இத் திட்டத்தின் பாரிய செயற்திட்டமாக 15 புதிய நகரங்கள் அமைக்கப்படும் எனவும் அவை தெற்கு, கிழக்கு பகுதியில் அமைக்கப்படும் எனவும் அவரின் அறிவிப்பு உள்ளது.

சனாதிபதி சந்திரிகாவின் புனர் நிர்மாணச் செயற்திட்டத்தில் வடக்கில் புதிய நகரங்கள் எவையும் அமைக்கப்படுவதான அறிவிப்புக்கள் இடம்பெறவில்லை என்பது ஆச்சரியத்திற்குரியதொன்றல்ல. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா போன்ற இனவாதிகளிடம் இருந்து இதனைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு எதிர்பார்ப்பவர்கள் இருந்தால் அவர்கள் சனாதிபதி சந்திரிகா போன்றவர்களைப்புரிந்து கொண்டவர்களாக இருக்க முடியாது.

சுனாமி பேரலைகளினால் தமிழர் தாயகப் பகுதி பேரழிவிற்கு உட்பட்டதென்பதுஅனைவருக்கும் தெரிந்ததொன்றே. அதிலும் குறிப்பாக தமிழர் தாயகப் பகுதியில் அம்பாறை மாவட்டமும் முல்லைத்தீவு மாவட்டமும் பெரும் அனர்த்தத்தைச் சந்தித்தவையாகும். இதில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முல்லைத்தீவு மாவட்டம் பாரிய அழிவைச் சந்தித்தது. நகரமே நிர்மூலம் ஆகியது.

இதனைத் தவிர வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பருத்தித்துறை நகர்ப்பகுதியும் பெரும் அழிவைச் சந்தித்தது. ஆனால் தற்பொழுது சனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ள. 15 நகரங்களில் இவை இடம்பெற்றதாக இல்லை. கிழக்கு தெற்குக்கரையோரங்களில் புதிய நகரங்கள் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருப்பினும் அவை எவை எனக்குறித்த தகவல் வெளிவரவில்லை. ஆகையினால் முல்லைத்தீவு நகரம் இதில் உள்ளடங்கியதாகவும் தகவல் இல்லை.

இதேவேளை கிழக்கிலும், நகரங்கள் உருவாக்கப்படும் என சனாதிபதி தெரிவிப்பினும் 15 நகரங்களில் எத்தனை நகரங்கள் அங்கு நிர்மாணிக்கப்படும் என தகவல் ஏதும் இல்லை. ஆனால் ஒன்று நிச்சயமாகக் கூற முடியும். ஒன்று அல்[illegible] [illegible]ரெண்டு மட்டுமே நிர்மாணம் செய்யப்படும் என்பதும். ஆன[illegible] [illegible]வகூட தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் நிர்மாணப்[illegible] [illegible]யப்படும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை.

தமிழர் தாயகப் பகுதியில் சிறிலங்கா அரசாங்கம் எந்தளவிற்குப் புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபடும் என்பதற்கு அழிவுற்ற பகுதிகளில் கட்டட இடிபாடுகளை அப்புறப்படுத்துவதற்கு அரசாங்கம் கனரக வாகனங்களை அனுப்பாமல் இருப்பதில் இருந்தே புரிந்து கொள்ள முடியும்.

சிறிலங்கா அரசு தமிழர் தாயகப் பகுதியில் யுத்தத்தினால் ஏற்பட்ட பாரிய அழிவுகளைச் சீர்செய்யும் பணிகளுக்கு உதவி புரிய சர்வதேச நாடுகள் முன் வந்த போதும் அதில் பெரிதும் அக்கறை காட்டவில்லை. மாறாக அதற்கு முட்டுக்கட்டை போட்டது என்றே சொல்லலாம். இதற்கு ஒரே காரணம் தமிழ்மக்கள் மறுவாழ்வடைந்து விடுவார்கள் என்பதினாலேயே ஆகும்.

அவ்வாறு இல்லாது விட்டால் மூன்றாம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை அடுத்து உருவாக்கப்பட்ட உடனடி மனிதாபிமானத் தேவைக்கான உப குழு (சிரான்) செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்திருக்கும் இதன் மூலம் யுத்தத்தினால் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள தமிழ் மக்கள் நன்மை அடைந்திருப்பர்.

ஆனால் தமிழ் மக்கள் புனர்வாழ்வோ, புத்துயிர்ப்போ பெறுவதைச் சிங்கள ஆட்சியாளர்கள் எவருமே விரும்புவதில்லை. இதன் காரணமாகவே சிரான் அமைப்பு செயற்படுத்துவதற்கு இடையூறு எழுந்தது. அதாவது தமிழ் மக்கள் தமது இழப்புக்களில் இருந்து மீண்டெழுந்து வந்து விடுவார்களோ என்ற இனவாத சிந்தனையே காரணமாகும்.

ஆகையினால் சுனாமி அனர்த்தத்தினால் தமிழருக்கு ஏற்பட்ட இழப்பிற்கான புனர்நிர்மாணப் பணிகளை அரசு மேற்கொள்ளும் என எதிர்பார்ப்பது மடமையாகவே இருக்கும். தற்பொழுது அரசாங்கம் குறிப்பிட்ட அளவில் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைக்கின்றதென்பது தாம் தமிழ் மக்களை புறக்கணிக்கவில்லை என்பதைச் சர்வதேச சமூகத்திற்குச் காட்டிக்கொள்ளவும் அவற்றிடம் இருந்து மேலதிக உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்குமாகவே ஒழிய, தமிழ் மக்களும்தமது நாட்டுப் பிரஜைகள் என்ற அடிப்படையில் அல்ல.

ஆகையினால் சிறிலங்கா அரசாங்கம் தமிழர் தொடர்பாக எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதுதமிழருக்கு தெரிந்ததொன்று தான். இதேவேளை சிறிலங்கா அரசு தமிழ் மக்களையும் தமது பிரஜைகள் எனக் கூறிக்கொள்வதினாலேயே தமிழ் மக்கள் சர்வதேசம் வழங்கும் உதவிகள் தமக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனக் கோருகின்றனர். அத்தகைய தொடர்பு இல்லாவிடில் சிங்களதேசம் தர மறுப்பதை தமிழர்கள் வழங்குமாறு கோரி நிற்கப் போவதில்லை.

# குடா நாட்டில் 1258 சடலங்களே இதுவரையில் மீட்கப் பட்டுள்ளன

### -1240 பேரைக்காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டை தாக்கிய சுனாமி ஆழிப்பேரலையின் தாக்கங்களினால் உயிரிழந்தோரில் 1258 பேரது சடலங்களே இது வரையில் மீட்கப்பட்டிருப்பதாக யாழ். அரச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைவிட 1240 பேர் சுனாமி கடற்பேரலையை அடுத்துக் காணாமல் போயிருப்பதாகவும் இவர்கள் கடல் நீரினால் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அத்துடன் இவ்வாறு காணாமல் போனவர்களில் எவரும் உயிருடன் இருப்பதற்கான தகவல்கள் கிடைக்காததால் இவர்களும் உயிரிழந்து போயிருக்கக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுனாமி அனர்த்தங்களால் 28644பேர் தமது குடியிருப்புகளை விட்டுஇடம் பெயர்ந்து அகதிமுகாம்களிலும், நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியிருப்பதாகவும் யாழ். அரச செயலக புள்ளிவிபரக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க சுனாமி அனர்த்தங்களால் சேதமான கரையோரப்பிரதேசங்களில் மீட்புப்பணிகள்தொடர்வதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனஅஞ்சப்படுகிறது. (27)

## பிறிமா நிறுவனத்தினரால் உருவாக்கப்பட்டதே மாத்தட்டுப்பாடு!

### -அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

நாட்டில் கோதுமை மாத்தட்டுப்பாடு நிலவுவது உண்மையே என நுகர்வோர் வர்த்தகத்துறை அமச்சர்ஜெயராஜ்பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். இந்மாத் தட்டுப்பாடு பிறிமா நிறுவனத்தால் போலியாக உருவாக்கப்பட்ட ஒரு செயற்பாடு எனவும் இதற்கு காரணம் பிறிமா நிறுவனத்தினால் உற்பத்திசெய்யப்படும் மாவிற்கு வழங்கிவந்த மானியத் தொகையை வழங்காது இருக்க அரசாங்கம் முடிவெடுத்தமையே காரணம் எனத் தரிவித்த அவர் அமச்சர் என்றவகையில் உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளதோடு வெளிநாட்டிலிருந்து மாவைஏற்றிய கப்பல் இலங்கை நோக்கிவந்துகொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (32)

## சண்டே லீடர் ஆசிரியருக்கு நீதிமன்றம் பிடியாணை

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் சண்டேலீடர் ஊடக இதழின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவுக்குசபையின் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித் துள்ளது. சிறிலங்கா கிரிக்கெட் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால தாக்கல்செய்த மனுவின் அடிப்படையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ள்ளது. இன்றைய தினம் தமது தரப்பு பிரதிவாதி வெளிநாடு சென்று விட்டமையால் மன்றிற்கு சமுகம் அளிக்கவில்லை எனலசந்தவிக்கிரமதுங்கவின் சட்டத்தரணியான ஜி.அருள் பிரகாசம் நீதிமன்றத்தில் தெரிவித்தார். மனுதாரரான திலங்க சுமதி பாலவின் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் பிரதிவாதி வெளிநாடு செல்ல வேண்டுமாயின் நீதிமன்றத்தின் அனுமதியை பெற்றிருக்க வேண்டும் என்பதை அங்கு சுட்டிக் காட்டினார்கள். இந்த நிலையில் ஊடகவியலாளர் ஒருவரும் சட்டத்தின் முன்னால் சாதாரண பொதுமக்களுக்கு சமனாகவே கருதப்படுவார்எனக்கூறி நீதிபதி இந்தபிடியாணையை பிறப் பித்தார். அதேநேரம் இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். போதுச்சணடேலீடர் செய்தித் தாளின் பிரசுரிப்பாளர் லால்விக்கிரமதுங்க மற்றும்செய்தித்தாளின் ஊடக வியலாளர் பெட்ரிக்கா ஜேன்ஸ் ஆகியோரையும் மன்றில் ஆஜராகுமாறு நீதிபதி ஸ்ரீஸ்கந்தராஜா உத்தரவிட்டார்

## சமாதானப் பேச்சுவார்த்தைகளை சனாதிபதி ஆரம்பிக்க வேண்டும்

### -பிரதியமைச்சர்களின் ஒருங்கிணைப்பாளர்

நாட்டை கட்டியெழுப்பும் பணிகள் முன்கொணரப்படும் சமகாலத்தில் இலங்கையில் சமாதான பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படவேண்டும் என சனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. பிரதி அமைச்சர்களின் ஒருங்கிணைப்பாளர் திலான் பெரேரா இது தொடர்பாக சனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். தற்போதைய நிலையில் சமதானம்இடறுமாகவிருந்தால் ஏனைய அனைத்துப்பணிகளும் முடங்கிவிடும்எனவும்அவர் எச்சரித்துள்ளார்

## அரசின் மீளக்கட்டியெழுப்பும் திட்டத்தில் 15புதிய நகரங்கள் உருவாக்கம்

### -வடகிழக்கில் எதுவுமில்லை

(கொழும்பு)

சிறிலங்கா சானதிபதி சந்தரிகா, சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாக வெளியிடப்பட்ட தேசிய அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வைக் கட்டுடி யெழுப்பும் அரசின் பெரும் திட்டத்தில் வடக்கு முற்றாகப் புறக் கணிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அரசின் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஏனைய பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட தேசிய முகாமைத்துவச் செயலணிக் கூட்டத்திலேயே சனாதிபதி நாட்டைக் கட்டி யெழுப்பும் பெரும் திட்டத்தை அறிவித்தார்.

இதில் சுனாமி கடற் கொந்தளிப்பால் சின்னாபின்னமான நாட்டின் கரையோரப் பிரதேசங்களில் பதினைந்து புதிய நகரங்கள் அமைக்கப்படுமெனத் தெரிவித்தார்.அவரின் அறிவிப்பில் கிழக்குக்கரையோரம் முதல் தெற்குக்கரையோரம் வரையான பிரதேசங்களிலேயே இந்தப் பதினைந்துநகரங்களும் அமைக்கப் படவுள்ளன.

இதன்போது சுனாமியால் அழிவுற்ற கிழக்குப்பிரதேசம் புனரமைப் பற்றிஎதுவும்குறிப்பிடப்பட வில்லை.

## உயர்மட்ட நோர்வேக் குழு நாளை கொழும்பு வருகிறது

நோர்வே உயர்மட்ட அதிகாரிகளின் குழுவொன்று நாளை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குழுவில் நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன்பீற்றர்சன்சர்வதேச அபிவிருத்திஅமைச்சர் ஹில்டேஜோன்சன் ஆகியோரும் அடங்குவர்.இவர்கள் இங்குவிஜயம் மேற்கொண்டு சுனாமி பாதித்த அம்பாந்தோட்டை, முல்லைத் தீவு ஆகிய பகுதிகளைப் பார்வையிடுவர். நோர்வே அரசு இலங்கைக்கு 183 மில்லியன் அமெரிக்கடொலர்களை வழங்க முன் வந்துள்ளது. நோர்வே அரசு சர்வதேச அமைப்புக்கள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபட விருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## ஐ.தே.கட்யில் இணைவு

ஆளும் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் தென் மாகாண அமைச்சர் பியசிறி நேற்று ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டார் தாம் எதிர்கால அரசியல் நலன் கருதி இந்த முடிவை மேற்கொண்டதாக அவர்தெரிவித்துள்ளார். இதேவேளை சனாதிபதியினால் அமைக் கப்பட்டுள்ள அவசரசேவைசெயலணிக்குழு தொடர்பில் தாம்அதிருப்தியை கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நலன்சார்ந்த அடிப்படையிலேயே ராணுவம் உதவி புரிகின்றது!

## - யாழ். மனிதநேய அமைப்புக்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல் என்ற போர்வையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் யாவும் முற்றுமுழுதாக இராணுவ நலன்களையே அடிப்படையாகக் கொண்டவை என யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மனிதநேய அமைப்புக்கள் பலவும் குற்றம் சாட்டியுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டு மக்களுக்கு அரச படைகள் சகலவிதத்திலும் உதவி வருகின்றன. என்பதை வெளி உலகிற்குக்காட்டும் விதமாக ஆங்காங்கே பாதிக்கப்பட்ட மக்களுக்கு சில உதவிகளைப் புரிந்து வரும் படையினர் அவற்றை ஒரு சில ஊடகங்கள் வாயிலாகவும் பிரசாரப்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதைவிட கடற்படையினர் கடலால் அள்ளிச் செல்லப்பட்ட தமது முகாம்களை மீள அமைப்பதற்கான முயற்சிகளுக்காக மேற்கொண்டுவரும் துப்புரவுப்பணிகளையும், முகாம் அமைப்பிற்காக மக்களது வீடுகளிலிருந்து கட்டடப்பொருட்களைப் பிடுங்குவதையும் பொதுமக்கள் நலன் கருதி இராணுவம் செய்யும் துப்புரவுப்பணிகள்எனவும் பிரசாரப்படுத்தியும் இவ்வாறு படையினர் தம் நலன்கருதி மேற்கொண்டு வரும் பணிகளை மக்களுக்கான மனித நேயப்பணிகள் என பிரசாரப்படுத்திவருவதைச் சுட்டிக்காட்டியே இவ்வாறு மனித நேய அமைப்புகள் பலவற்றாலும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. (33)

## திருத்தம்

கேணல் கிட்டு உள்ளிட்ட 10 வேங்கைகளின் நினைவு நிகழ்வில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் உரையாற்றியதாக வெளியான நேற்றைய எமது பத்திரிகைச் செய்தியில் 18780 மாவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த எண்ணிக்கை 17.790 என்பதே சரியானதாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தவறுதலாக எடுத்தவர்கள் ஒப்படைக்க கோரிக்கை!

போராளி தென்றல் என்பவருடைய சிறிய கறுப்புநிற சூற்கேஸ்வேக் சில ஆவணங்களுடனும் உடமைகளுடனும் நேற்று கறுக்காக்குளத்திற்கும் கிளிநொச்சி பேருந்து நிலையத்திற்கும் இடையில் மடுபஸ்சில் தவறிவிட்டது. இதனைக் தவறுதலாக எடுத்துச் சென்றவர் கிளிநொச்சி புலிகளின்குரல் நடுவப்பணியகத்தில் ஒப்படைக்கவும். இதேபோன்று மடுபஸ்சில் கறுப்பு நிற சூற்கேஸ் வேக் கிடைத்துள்ளது. புலிகளின்குரல் நடுவப்பணிமனையில் உள்ளது.

# பாதிக்கப்பட்ட மாணவருக்கு ச.த.மா.பேரவை உதவும்

சுனாமியால் பாதிக்கப்பட்ட க.பொ.த.உயர்தர மாணவர்களில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களில் பாட விளக்கக் குறிப்புக்களை இழந்த மாணவர்களை எமது அலுவலகத்தில் வந்து தொடர்பு கொண்டு உங்கள் கல்வியை தொடர்வதற்கு வேண்டிய பாடக் குறிப்புகள் என்ன என்பதை எமக்குத் தெரியப்படுத்தினால் அன்றிலிருந்து இரண்டு நாட்களுக்குள் உங்களுக்குத் தேவையான பாடக் குறிப்புக்களை எம்மால் பெற்றுத் தர முடியும் என சர்தேச தமிழீழ மாணவர் பேரவையின் செய்திக்குறிப்புத் தெரிவிக்கிறது.

அத்தோடு சுனாமியால் பாதிக்கப்பட்டு இதுவரை எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உதவிகளை பெற்றுக்கொள்ளாத தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்நுட்ப நிறுவனம், கல்வியற் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களை தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்று உங்கள் கல்வியை தொடருமாறு கேட்டுக்கொண்டுள்ளது. (33)

# புலிகளின் கடற்படை சிறப்புத் தளபதி சூசை திட்டமிடல் குழுவினர் சந்திப்பு

சுனாமி அலையின் தாக்கத்தினால் அழிக்கப்பட்ட தமிழ் பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கான திட்டமிடல் குழுவினரை நேற்று தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்றுமாலை 3.30 மணியளவில் முல்லைத்தீவு செயலணிக் குழுவினரின் செயலகத்தில் இவர்களைச் சந்தித்து தமிழீழ கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் கலந்துரையாடினார். இக்கலந்துரையாடலில் முல்லை நகரை மீளக்கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்தல் தொடர்பாகவும் குடியிருப்புக்கள் அமைப்ப தற்குரிய ஏதுவான இடங்களை தெரிவு செய்தல், மற்றும் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கவுள்ள குடியிருப்புக்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. (ச)

# கிளி மாவட்டவைத்தியசாலை கனடா ,சுவீடன் வைத்தியர்கள்

கனடா, மற்றும் சுவீடன் நாட்டு வைத்திய நிபுணர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைசத்திர சிகிச்சை கூடத்தில்வைத்தியசாலை வைத்தியர்களுடன் இணைந்து சத்திரசிகிச்சையினை மேற்கொண்டுவருகின்றனர்.ஆசிய சர்வதேச மனிதநேயபுனர்வாழ்வுக் குழுவை சேர்ந்த கனடா நாட்டவரான ஜெப்றிவே,மேரி ஆன்வே ஆகியோரும் சுவீடன் நாட்டைசேர்ந்த கரோலினா ஜோறன்சன்ஆசிய மூவருமே மேற்படி சிகிச்சையினை மேற்கொண்டு வருகின்றனர்.இவர்கள் இன்னும்சில தினங்கள் தங்கிநின்று சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (கு)

## கிழக்கு...

நிலையே ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்து வெளிநாடுகள் வழங்கிய கூடாரங்களில் வசித்துவரும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தற்போது பெய்து வரும் கடுமையான மழை காரணமாக கூடாரங்களுக்குள்ளும் வாழ முடியாது அவஸ்தைப் படுகின்றார்கள். கூடாரங்கள் வெற்றிடத்தில் அமைக்கப் பட்டுள்ளன. நிலத்தின் மீது பாய்களை விரித்துக்கொண்டு தங்கியுள்ள அகதிக் குடும்பங்கள் அங்கேயே சமைத்து சாப்பிட்டுப் பின்னர் இரவில் நித்திரை கொள்வர்.

கடும் மழைகாரணமாக இவர்கள் நள்ளிரவே விழித்துக்கொண்டு படுக்க இடமின்றி குழந்தைகளைக் கைகளில் வைத்துக்கொண்டு நிற்கவேண்டியதாயிற்று என தமிழர் புனர்வழ்வுக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. விறகு மழையில் நனைந்து போனதால் சமைப்பதற்கும் அவர்களுக்குமுடியாமல் போய்விட்டது. மழை வெள்ளம் கூடாரங்களுக்குள் செல்வதால் ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் இவ்வகதிக்குடும்பங்கள் தவிக்கின்றன என்று நிலைமையை நேரிற் பார்த்த தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்ட அலுவலகத்தைச்சேர்ந்த நித்தியப்பிரபா தெரிவித்தார். திருகோணமலைக்கு வடக்கே அடம்போடை, நிலாவெளி, பெரியகுளம், கிண்ணியா, மூதூர், ஈச்சிலம்பற்றை ஆகிய பிரதேசங்களில் சுனாமியால் இடம்பெயர்ந்த மக்கள் கூடாரங்களில் தான் வசிக்கின்றனர். மழை தொடர்ந்தால் அவ்வகதிக் குடும்பங்கள் கூடாரங்களை விட்டு வெளியேறும் நிலை ஏற்படும் ஏன்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## க.பொ.த....

இதேவேளை கடந்த செப் ரெம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் தற்போது நடைபெறவுள்ள் பரீட்சைகளுக்கு தோற்று வதிலுள்ள அசௌகரியங்கள் காரணமாக வரும் யூன் மாதம் அவர்களுக்கு விசேட பரீட்சை நடத்து வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## அவசரகால....

வாகனங்களை வாடகைக்கு பெற்று வேலை செய்யுமாறு கூறப்பட்டுள்ளது. ஆனால் இங்கு கனரக வாகனங்களை வாடகைக்கு பெறமுடியாது. ஏனெனில் அவை இங்கு இல்லை. எங்களினுடைய பாவனையில் உள்ளதைத்தான் நாங்கள் இவ் வேலைத்திட்டத்தில் ஈடுபடுத்தியுள்ளோம். அவற்றைக் கொண்டு விரைவாக செய்யமுடியாதுள்ளது. இந்தநிலையில் சுனாமி தாக்கி ஏறத்தாழ 22 நாட்கள் கடந்த நிலையில் இன்றும் பல உடல்கள் மீட்கப் பட்டுள்ளன.

உண்மையில் இந்த அனர்த்தத்திற்கு உதவி புரியவென பல நாடுகள் இங்கு வந்து இறங்கியுள்ளன.அத்தோடு பல நாடுகள் பெருந்தொகையான உதவிகளை வழங்கியுள்ளது. ஆனால் எதுவும் இங்கு வந்து சேரவில்லை. இனியும் இந்த உதவிகள் எமது பகுதிக்கு வந்து சேருமென்ற நம்பிக்கை எமக்கும், எமது மக்களுக்கும் முற்றாக இல்லை. இதனால் தற்காலிக கொட்டகைகளை தென்னங்கிடுகுகளாலும் காட்டுத்தடிகளாலும் அமைத்துக்கொடுக்க முடிவெடுத்துள்ளோம். (ச)

## யாழ்.இல்...

ஆரம்பித்துள்ள அவர் நேற்று ஊடகவியலாளர் களைச் சந்தித்திருந்தார். அவ்வேளையில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், இக்கால அவகாசத்தை நீடிக்க வேண்டுமா என்பதை இலங்கை அரசும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராலயமும் மட்டுமே தீர்மானிக்குமென்றார்.

இதனிடையே விடுதலைப் புலிகளின்கட்டுப்பாட்டின் கீழுள்ள சுனாமிக் கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தங்களது குழு வைத்தியசேவைகளை வழங்குமா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் இவ்விடயம் தொடர்பிலும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயமே இறுதிமுடிவை எடுக்கு முடியுமென்றார். (27)

## ராணுவ....

பொலிசாரின் துணையுடன் பிணம் சம்பவம் இடத்தில் இருந்து இரவோடு இரவாக அப்புறப்படுத்தப்பட்டு, பொலிசாரினால் இனம் தெரியாத வாகனம் மோதி இவர் இறந்துள்ளார் என்று யாழ். போதனாவைத்தியசாலையில் உடல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (28)

## ராணுவச்....

எம்மைச் சந்தித்திருக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு இங்குள்ள நிலைமைகளை எடுத்து விளக்கியுள்ளோம். சர்வதேச சமூகத்தினுடைய மனிதாபிமான உதவிகள் உடனடியாக எமது பகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். நேரடியாக அதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.இங்குள்ள நடைமுறைச்சாத்தியமான கட்டமைப்புக்களுக்கூடாக சர்வதேச சமூகம் முன்வரவேண்டுமென்ற நிலைப்பாடுகளை நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம்.

**நெதர்லாந்து அரசு மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வந்துள்ளதா?**

அவர்கள் இப்பொழுது நிலைமைகளை மதிப்பீடு செய்துவருகிறார்கள். நிச்சயமாக சர்வதேச சமூகம் அனைவரும் இணைந்து இங்குள்ள பாதிப்புக்களுக்கு உதவிகள் புரியமுன்வரக்கூடிய சாத்தியக் கூறுகள் நிறைய உண்டு.

**சிறிலங்கா அரசு இந்தச் சூழ்நிலையிலும் ஆயுதக் கொள்வனவில் தீவிரம் காட்டுகிறது. இது தொடர்பாக நீங்கள் கூற விரும்புவதென்ன?**

இந்த விடயத்தை நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். இப்பொழுது இலங்கை அரசாங்கம் இந்த மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ள சூழலிலும் ஒரு யுத்த வெறிப்போக்கையும் இராணுவ வாதப்போக்கையும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றதென்பதற்குப் பல உதாரணங்களை அவர்களுக்குச் சுட்டிக்காட்டி வலியுறுத்தியுள்ளோம். அவசரகாலச் சட்டத்தை மீண்டும் எமது பிரதேசங்களுக்குள் பிரகடனப்படுத்தியதும், இராணுவத்தினரை மக்களுடைய நலன்புரி நிலையங்களுக்குள் புகுத்தியிருப்பதும் சர்வதேச உதவிகள் பாரியளவில் வந்து குவிகின்ற இந்தக் கட்டத்தில் உடனடியாகவே தனது இராணுவக் கட்டமைப்புக்களை பலப்படுத்தும் நோக்கோடு இராணுவ தளபாடக் கொள்வனவுக்கு பாரிய அளவு நிதியை ஒதுக்கீடு செய்து அதற்காக ஒரு குழு சென்றிருக்கின்ற செய்திகளையும் நாங்கள் அவர்களுக்குச் சுட்டிக்காட்டி வலியுறுத்தியிருக்கின்றோம். இந்த நேரத்தில் பாரிய பொருளாதார உதவிகளை மீண்டும் இலங்கை அரசாங்கம் தன்னுடைய இராணுவக் கட்டமைப்புக்களைப் பலப்படுத்துவதற்கும் மீண்டும் தமிழர் தாயகப் பகுதிகளுக்குள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான சூழ்நிலையாக இதைப் பயன்படுத்திக்கொள்கின்ற முயற்சியிலேதான் அது ஈடுபட்டுள்ளது. நாங்கள் இதையும் சர்வதேச சமூகத்திற்கும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

**ஆயுதக் கொள்வனவு என்பது படைவலுச் சமநிலையைப் பாதிக்காதா?**

இவற்றையும் நாம் எடுத்துக் கூறியுள்ளோம். சர்வதேச சமூகத்தினுடைய ஈடுபாடும் அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேயும் சர்வதேச சமூகமும் இந்த இராணுவச் சமநிலையையும்,சமபங்கையும் இருதரப்பையும் சமமாக மதித்து யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கொண்டுவந்த காரணத்தினால் தான் கடந்த மூன்று வருட காலங்களாக இங்கு நாட்டில்அமைதி நிலை தோற்றுவிக்கப்பட்டது. இதைச் சீர்குலைக்கும் வகையில் எவருமே முடிவுகளை எடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இலங்கை அரசாங்கம் இராணுவ சமநிலையைக் குழப்பி சம பங்காளிகள் என்ற அந்தஸ்த்தைப் புறக்கணித்து செயற்படுமேயானால் மீண்டுமொரு பெரிய நெருக்கடி தோன்றக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இதைத் தவிர்ப்பதற்கு ஏற்கனவே சர்வதேச சமூகம் எப்படி உதவியதோ அதே போன்ற முடிவுகளையும் உதவிகளையும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தியுள்ளோம்.

**போர்நிறுத்தக் காலங்களில் சமாதானத்தைக் குழப்பிய சிறிலங்கா படையதிகாரிகள் இப்போது சமாதான சூழல் பற்றி பேசக் கூடிய தன்மை இருக்கின்றதே?**

அதாவது சமாதான சூழல் பற்றி அரசாங்கம் சனாதிபதி படைத்தளபதிகள் பேசி சர்வதேச சமூகத்தினுடைய உதவிகளைக் கவர்ந்தெடுக்கும் நோக்கில்தான் அவர்கள் செயற்படுகிறார்களேயொழிய களநிலையில் தமிழ் மக்களுடைய மனங்களை வெல்வதற்கோ அல்லது தமிழ் மக்கள் திருப்திப்படக் கூடிய வகையிலோ அல்லது தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்பக் கூடிய வகையிலோ அரசாங்கமோ படைத்தரப்போ முடிவு களை எடுத்துச் செயற்பட வில்லை. அந்த வகையில் நாங்கள் அவர்களிற்கு வலியுறுத்திக் கூறியிருக்கின்றோம். மனிதாபிமானஉதவிகள் இலங்கை அரசாங்கத்தையும் படைகளையும் வலுப்படுத்துவதற்கு செல்லாது பார்க்கவேண்டும். உதவிகள் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

முக்கியமாக வடக்கு கிழக்கு தமிழர் தாயக பிரதேசம்தான் பெருமழிவை சந்தித்தது. யுத்தத்தாலும் அழிந்தது. இந்த இயற்கை அனர்த்தத்தினாலும் பேரழிவைச் சந்தித்து நிற்கின்றது. எனவே இங்கு சர்வதேச சமூகத்தினுடைய உதவிகள் நேரடியாக வந்தடையக் கூடிய வழிமுறைகளை சர்வதேச சமூகம் கையாள வேண்டுமென கேட் டுள்ளோம் என்றார்.

இச்சந்திப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களும் கலந்துகொண்டார்.

இன்னும் 4 நாட்களே உள்ளன! விரையுங்கள்!

Mega
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
23-01-2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
கணினியியல் கல்லூரி
(Affiliated to Asian)
யாழ்சாலை, கிளிநொச்சி.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது